12th SOUTH ASIAN GAMES 2016

# AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை  எண்: 10 எழுத்து: 03 மார்ச் - 2016  www.aharam.lk

# "இலங்கை முஸ்லிம் மாணவர்களாலும் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல முடியும்"

## தென்னாசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற பொத்துவில் அஷ்ரஃப்




50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UN WATER
WORLD WATER DAY
22 MARCH 2016 - WATER AND JOBS

# உலக குடிநீர் தினம் 2016

## மார்ச் 22


- 2016 ஆம் ஆண்டின் உலக குடிநீர் தினத்திற்கான தொனிப்பொருள் 'நீரும் அது சார்ந்த தொழில்களும்' என்பதாகும். இன்றைய உலகில் 1.5 பில்லியன் மக்கள் நீர் சார்ந்த தொழில் அமைப்புக்களிலேயே ஈடுபடுகின்றனர். எனவே, அவர்களின் வாழ்வியலை ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், உறுதிப்படுத்தல் ஆகிய நோக்கங்களுடனே இவ்வருட தொனிப்பொருள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.
- 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினைத் தொடர்ந்து மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா.பொதுச் சபை பிரகடனம் செய்தது.
- உயிருள்ள அனைத்து படைப்பினங்களின் இயக்கத்துக்கு ஆதாரம் நீர் ஆகும். எல்லா வளங்களுக்கும் மூலவளம் நீரே. உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உன்னத பொக்கிஷம் நீர் எனலாம்.

  ''எல்லா உயிர்ப் பிராணிகளையும் அல்லாஹ் நீரிலிருந்து படைத்துள்ளான்.'' (24:45)
- உலக நாகரிகங்கள் எல்லாம் நீர் நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளன. நைல் நதி, சிந்து நதி, யூப்பிரடிஸ், தைகிறீஸ் போன்றன உலக நாகரிகங்களின் பிறப்பிடங்கள் எனப்படுகின்றது. எனவே, இத்தகைய நாகரிக எழுச்சியின் மூலமே நீர் என்பது புலனாகின்றது.
- இன்று நீர் 'நீலத்தங்கம்' (Blue Gold) என அழைக்கப்படுகிறது.
- உலகத்தில் 97.5 சதவீதம் உவர் நீராகும். மீதமுள்ள 2.5 சதவீதம் சுத்தமான நீர். இதில் 2.24 சதவீதம் துருவ பகுதிகளில் பனிப்பாறைகளாகவும் பனிக்கட்டிகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள 0.26 சதவீத தண்ணீரைதான் குடிநீராகவும் விவசாயத்துக்கும் பயன்படுத்தும் நிலை உள்ளது.
- நீரை அதிகமாகப் பயன்படுத்தும் துறை விவசாயமாகும். 85 சதவீதம் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படுகின்றது என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கைத்தொழில் துறை 10 சதவீதத்தைப் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 5 சதவீதமே வீட்டுப் பாவனைக்குரியது.
- உலகில் பாதுகாப்பான நீரின்றி 8 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் உலகில் ஒரு கோடியே 50 லட்சம் குழந்தைகள் இறப்பதற்கு பாதுகாப்பற்ற குடிநீர் முதல் காரணமாக அமைகிறது
- உலகில் கிடைக்க கூடிய சொற்ப அளவு குடிநீரும் கழிவுகளால் மாசடைந்து வருகிறது. ஆண்டு தோறும் 40 ஆயிரம் தொன் கழிவுகள் நீரை மாசுபடுத்தி வருகின்றன. நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.
- மாசுபட்ட குடிநீரால் டைபாய்டு, அமிபியாசிஸ், ஜியாரடியாசிஸ், அஸ்காரியாசிஸ், கொக்கிப் புழு, தோல் நோய், காது வலி, கண் நோய், வயிற்று போக்கு உள்ளிட்ட நோய் தாக்குதல்கள் ஏற்படுகிறது.

## நீர்வளத்தை பாதுகாப்பது எம்மில் ஒவ்வொருவரினதும் கடமை என்பதை உணர்வோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



அல்குர்ஆனில் ஸூரா அல் அன்ஆமின் 99 ஆம் வசனத்திலும் அதே ஸூராவின் 141 ஆம் வசனத்திலும் அவ்வாறே, ஸூரா அர்ரஹ்மானின் 68 ஆம் வசனத்திலும் மாதுளம் பழம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. இதில் ஸூரா அர்ரஹ்மானின் 68 ஆம் வசனத்தில் சுவனத்தில் இருக்கும் கனிகளைப் பற்றி கூறும்போது அல்லாஹ் மாதுளம் பழத்தையும் சேர்த்துக் கூறியுள்ளான்.

38




22



32



30




AHARAM அகரம்

எண்: 10 - மார்ச் : 2016 - எழுத்து: 03






பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

துணை ஆசிரியர்
எஸ். ஸஹீர் அப்பாஸ் (இர்பானி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


**பாடத்திட்டம்**


| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அறபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36


**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# மாணவனின் ஆளுமையை வளர்ப்பதில் விளையாட்டுத் துறை இன்றியமையாதது

நாட்டின் நாளைய தலைவர்கள் மாணவர் சமுதாயமாகும். வருங்காலத் தலைவர்களான இவர்களின் பூரண ஆரோக்கியத்தில் சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலம் தங்கியுள்ளமை மறுதலிக்க முடியாது. கல்வியின் பிரதான குறிக்கோள் நாட்டிற்கு இயைந்த நற்பிரஜைகளை உருவாக்குவதாகும். எதிர்கால நற்பிரஜைகள் ஆரோக்கியம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

தனிநபர் ஒருவர் உடல்ரீதியாக மட்டுமன்றி, உளவியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் திருப்திகரமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு தனிநபர் ஒருவருக்குள்ள ஆற்றலே பூரண சுகாதாரம் அல்லது நிறைவான சுகாதாரம் என வரையறுக்கப்படுகிறது. விளையாட்டு ஒரு மனிதனுக்கு ஆரோக்கியமான உடல்வலுவை வழங்குகின்றது. விளையாட்டுக்களிலும் தொடர் பயிற்சிகளிலும் ஈடுபடுகின்றவர்கள் சிறந்த ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று. விளையாட்டுக்களும் உடற்பயிற்சிகளும் எல்லா வயதினருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அத்தியாவசியமானவை. சிறந்த தேக ஆரோக்கியத்துடன் இருப்பதால் நீண்ட காலம் சுகதேகிகளாக வாழ முடியும் என்பது நிதர்சனமானது.

ஒரு மனிதன் தன்னுடைய ஆயுளை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கே விரும்புவான். ஆரோக்கியம் என்பது மனிதனின் உடல் ஆரோக்கியம், சிந்தனை ஆரோக்கியம் இரண்டினையும் குறிக்கும். சிந்தனைகள் ஆரோக்கியமாக பிறப்பதற்கும் பிறந்த சிந்தனையை நடைமுறை வாழ்வில் வினைத் திறனுடன் வளர்ச்சியடையச் செய்வதற்கும் உடல் ஆரோக்கியம் இன்றியமையாதது. மாணவ பருவத்தில் உடல் ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதில் விளையாட்டுக்களின் பங்களிப்பு காத்திரமானது. மறுபுறம் கல்வி வாழ்வை நெறிப்படுத்துவதற்கும் ஆளுமை பண்புகளை வளர்ப்பதற்கும் விளையாட்டுக்கள் துணை புரிகின்றன.

விளையாட்டுக்கள் என்பது வெறும் பொழுதுபோக்கிற்கும் நேரத்தை கழிப்பதற்கான ஏற்பாடாகவும் கருதக் கூடாது. மாறாக, உடல் ஆரோக்கியத்தை வலுப்படுத்துவது போலவே அழகான பண்பாட்டு பயிற்சிகளையும் விழுமியங்களையும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் ஊடாக கிடைக்கப் பெறுகின்றன. நேர முகாமை, தலைமைத்துவ கட்டுப்பாடு, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, ஏனையவர்களின் உரிமைகள், உணர்வுகளை மதிக்கும் தன்மை என பல பண்பாடுகளை உருவாக்கும் ஆற்றல்கள் விளையாட்டின் மூலமாக நாம் அடையும் பயன்களே! வெறுமனே வெற்றி-தோல்விகள் என்ற எதிர்பார்ப்பிற்கு அப்பால் விளையாட்டின் மூலமாக நேரிய பண்பாடுகள் எம்மில் உருவாகும்போது மாத்திரமே விளையாட்டின் உண்மையான தாற்பரியங்களை அடைந்து கொள்ள முடியும்.

எனவே, பாடசாலை நாட்களில் குறைந்தது ஒரு வியைாட்டிலேனும் எம்மை ஈடுபடுத்த வேண்டும். சந்தர்ப்பம் உள்ளவர்கள் பல விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் ஏற்புடையதாகும். அத்தோடு, விளையாட்டுக்கள் எம்மில் பல புதிய நம்பிக்கைகளை உருவாக்கும் ஆற்றல் உடையது. இலக்கை நோக்கி பயணிக்கும் துணிச்சலையும் கற்றுத்தரும். அண்மையில் தென்னாசிய விளையாட்டுக்களில் பிரகாசித்து பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட பொத்துவில் அஷ்ரஃப் தன்னுடைய பாடசாலை நாட்களில் சிறந்த முறையில் தொடரான பயிற்சிளை மேற்கொண்டிருக்கிறார். தன்னுடைய கிராமத்து சூழலில் விளையாடுவதற்கு மைதானம் இல்லாத நிலையிலும் தொடரான பயிற்சிகளைப் பெற்றிருக்கிறார். சவால்கள் நிறைந்தபோதும் சாதிக்க வேண்டும் என்ற துணிச்சல் அவரை புகழின் உச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. எனவே, எமது பாடசாலை நாட்களில் விளையாட்டுத் துறைகளில் ஈடுபடுவதன் ஊடாக ஆரோக்கியமான வாழ்வினை பெற்றுக் கொள்வதோடு சிறந்த ஆளுமை பண்புகளைப் பெற்ற மாணவர்களாக உருவாகுவோம் என்பது நிச்சயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஒருவருக்கு அவருடைய தந்தை, பிள்ளைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் உங்களிடத்தில் நேசத்துக்குரியவனாக மாறாத வரையில் அவர் ஈமான் கொண்டவராக மாட்டார்." (ஆதாரம்: புஹாரி)**

இந்த உலகத்தில் பிறந்த அனைத்து மனிதர்களை விடவும் அதி உன்னத படைப்பாக காணப்படுகின்ற அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது நாம் கொண்டிருக்க வேண்டிய அன்பின் ஆழத்தை அழகிய முறையில் இந்த ஹதீஸ் எடுத்துரைக்கின்றது.

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் தூதர் மீது கொள்கின்ற அன்பானது அவனது ஈமானை முழுமைப்படுத்துவதாகவும் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தரக் கூடியதாகவும் அமைந்து காணப்படுகின்றது. இதனால்தான் நாம் அண்ணலார் மீது வைக்கின்ற அன்பு ஏனைய மனிதர்கள் மீது வைக்கின்ற அன்பை விடவும் உயர்ந்த தரத்தில் காணப்பட வேண்டும். இவ்வன்பு வெறும் வார்த்தைகளுக்கப்பால் செயல் வடிவிலும் செலுத்தப்பட வேண்டும்.

அல்லாஹ் இவ்விடயம் தொடர்பாக அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

''நபியே நீங்கள் சொல்லுங்கள்! உங்களது பெற்றோரும் பிள்ளைகளும் சகோதரர்களும் மனைவியரும் குடும்பத்தவர்களும் நீங்கள் சம்பாதித்த செல்வங்களும் நஷ்டமடைந்து விடுமோ எனப் பயப்படும் வியாபாரமும் நீங்கள் திருப்தியுற்றிருக்கும் வசிப்பிடங்களும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனது பாதையில் போராடுவதை விட மிக விருப்பத்திற்குரியதாக இருந்தால் அல்லாஹ் தனது தண்டனையைத் தரும் வரை எதிர்பார்த்திருங்கள். இத்தகைய பாவிகளுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.'' (அத்தௌபா: 24)

நபித் தோழர்கள் இவ்வன்பை உரிய முறையில் வெளிப்படுத்தினார்கள். அந்த வகையில் நபியவர்கள் மீது அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கொண்ட அன்பின் ஆழ, அகலத்தை பின்வரும் நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபோது நபியவர்களைநான்குபுறமும்சுற்றிச்சுற்றிசென்றார்கள். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஏன் இவ்வாறு செய்தீர்கள் என காரணம் வினவப்பட்டபோது, எங்கிருந்தாவது அம்பு வந்து நபியவர்களை தாக்கிவிடுமோ என்ற அச்சத்திலேயே அவ்வாறு செய்ததாக குறிப்பிட்டார்கள்.

மேலும், ஹிஜ்ரத்தின்போது தவ்ர் குகையில் தங்கியிருந்த வேளையில் தனது மடியில் தூங்கிக் கொண்டிருக்கும் நபிகளாரின் தூக்கம் கலைந்து விடக் கூடாது என்பதனால் தன்னை ஒரு விஷப் பாம்பு தீண்டியதையும் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சகித்துக் கொண்டார்கள்.

இவ்வாறே, உஹத் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அபூதஜானா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபிகளார் மீது கொண்ட அன்பின் காரணமாக தனது உயிரையும் பெரிதாக கருதாமல் நபிகளாரை நோக்கி வந்த அம்புகளை தனது மேனியைக் கொடுத்து தடுத்தார்கள்.

இன்றைய மனித சமூகம் குறிப்பாக, எம்மைப் போன்ற இளம் சமூகம் சில சர்வதேச தினங்களை அடையாளப்படுத்திக் கொண்டு அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கொடுக்க வேண்டிய அன்பை அற்ப இன்பங்களை நோக்காகக் கொண்டு யாருக்கோ வழங்கிக் கொண்டிருப்பதை காணும்போது ஈமானுள்ள எந்த இதயமும் கவலைப்படாமல் இருக்க முடியாது.

இத்தகைய மிக மோசமான நிலைகள் மறுமை வாழ்வை பாழ்படுத்திவிடும் என்பதை நாம் எம் உள்ளங்களில் ஆழமாக பதிந்து கொள்ள வேண்டும்.

மாணவர்களாகிய நாம் இன்று நபிகளார் மீது அன்பை வெளிப்படுத்துவதற்கான சில வழிகள்:

- நபியவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்தல்

இன்றைய மனித குலம் நபியவர்களின் சிறந்த முன்மாதிரியை பின்பற்ற வேண்டிய தேவையில் இருக்கின்றது. ஏனெனில், அம்முன்மாதிரிகள்தான் இன்றைய மனிதனின் ஈடேற்ற வாழ்வுக்கு வழியேற்படுத்தக் கூடியனவாக உள்ளன.

- நபிகளாரிடத்தில் காணப்பட்ட உயரிய பண்பாடுகளை எமது வாழ்வில் அணுவணுவாகப் பின்பற்றுதல்

நாம் பெற்றோருடன், பெரியவர்களுடன், உறவினர்களுடன், அண்டை வீட்டாருடன், நண்பர்களுடன் மற்றும் அஜ்னபி - மஹ்ரமி விடயத்தில் நபிகளாரின் போதனைகளைப் பின்பற்றுதல்.

- நபியவர்கள் மீது அதிகம் ஸலவாத்துச் சொல்லி அவர்களின் தியாகங்களை நினைவுகூர்தல்
- அறிவு, பணிவு மற்றும் நடுநிலை சார்ந்த வாழ்க்கைப் போக்கை கடைப்பிடித்தல்
- விருப்பிலும் வெறுப்பிலும் அண்ணலாரின் போதனைகளை கடைப்பிடித்தல்

இத்தகைய செயற்பாடுகளால் அல்லாஹ்வின் தூதர் மீது அன்பு செலுத்தி பூரண ஈமான் உள்ளவர்களாக மாறுவதுடன் உயரிய நடத்தைக் கோலங்களைக் கொண்டவர்களாகவும் மாற முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

குர்ஆனிய களஞ்சியம்

தொடர் 07

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள தீயோர்கள்

**இப்லீஸ்**

ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் களிமண்ணினால் படைக்கப்பட்டார் என்ற ஒரே காரணத்திற்காக, அவரை வணங்குமாறு அல்லாஹ் இட்ட கட்டளையை ஆணவத்துடன் புறக்கணித்தவனே இப்லீஸ் ஆவான். அதன் பின்னர் இப்லீஸை அல்லாஹ் சபித்து வெளியேற்றினான். இப்லீஸ் தன்னை மறுமை நாள் வரை எவ்வித தண்டனையும் அளிக்காமல் விட்டு வைக்குமாறும் தான் மனித சமூகத்தை வழிகேட்டுக்கு இட்டுச் செல்வேன் எனவும் சூளுரைத்தான். அதற்கு அல்லாஹ் ''உன்னைப் பின்பற்றுபவர்கள் அனைவரையும் கொண்டே நரகத்தை நிரப்புவேன்'' என கூறினான். அன்று தொடக்கம் மனித சமுதாயத்தின் மிகப் பெரும் எதிரியாக இப்லீஸ் விளங்குகின்றான்.

**ஆப்ரஹா**

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த ஆப்ரஹா எனும் கிறிஸ்தவ மன்னன் யெமன் தேசத்தை ஆண்டு வந்தான். அவன் கஃபாவை இடித்து நொறுக்கி மக்கா நகரத்தைக் கைப்பற்றும் கொடிய நோக்குடன் ஆயிரக்கணக்கான படை வீரர்களுடனும் நூற்றுக்கண க்கான யானைகளுடனும் படையெடுத்து வந்தான். அத்தருணத்தில் மக்காவாசிகள் உதவியற்றவர்களாகவும் இறையில்லத்தை பாதுகாக்க முடியாதவர்களாகவும் இருந்தனர். அச்சமயத்தில் தமது அலகுகளில் சிறிய கற்களை சுமந்த வண்ணம் ஆப்ரஹா மன்னனின் படைக்கு மேலாக பறவைக் கூட்டம் பறந்து வந்து கற்களை மழையாக பொழிந்தது. ஆப்ரஹா மன்னன் உட்பட படைகள் அழிந்தன. மக்கா நகரமும் இறையில்லமும் அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்டன.

**காரூன்**

கொடுங்கோல் அரசன் பிர்அவ்னின் ஆட்சிக் காலத்தில் அவனது உற்ற தோழனாக காரூன் என்பவன் விளங்கினான். செல்வச் செழிப்பின் உச்சத்தில் இருந்தபோதும் அதற்காக ஒருபோதும் அல்லாஹ்வுக்கு அவன் நன்றி செலுத்தியதில்லை. அகந்தையினாலும் அகங்காரத்தினாலும் பீடிக்கப்பட்டு கண்மூடித்தனமாக இருந்தான். தனது ஆற்றல்களும் திறமைகளும் மாத்திரம்தான் தனது செல்வத்திற்கு காரணம் என எண்ணிக் கொண்டிருந்தான். அல்லாஹ் அவனுக்கு அளித்த அருட்கொடைகளே அவை என சிந்திக்க மறந்திருந்தான். ஏழை, எளியோர்களின் தேவை அறிந்து அவனது செல்வத்தில் இருந்து ஒரு பகுதியேனும் கொடுக்க அவன் விரும்பவில்லை. அவனது ஆணவப் போக்கு எல்லை கடந்ததும் அல்லாஹ் பூமியைப் பிளந்து அவனையும் அவனது செல்வங்களையும் விழுங்கச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வாழ்ந்த நாட்களில் ஈராக்கை ஆட்சி செய்த கொடுங்கோல் அரசனே நம்ரூத் ஆவான். அவன் தன்னையே கடவுளாக பிரகடனப்படுத்தி தனது நாட்டு மக்களை தன்னை வழிபடவும் செய்தான். இது விடயத்தில் இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அரசன் நம்ரூத்துடன் முரண்பட்டார்கள். அவனை வணங்கி வழிபட மறுத்தார்கள். அரசன் நம்ரூத் அவனே கடவுள் எனவும் அவனால் உயிர்ப்பிக்கவும் மரணிக்கவும் செய்ய முடியும் எனவும் வாதிட்டான். ''நீதான் கடவுள் என்பது உண்மையானால் சூரியனை மேற்கில் உதிக்கச் செய்து நிரூபித்துக் காட்டு'' என இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நம்ரூத்திற்கு சவால் விட்டார்கள். இதனால் கடுங்கோபமுற்ற அரசன் நம்ரூத் இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான்.

**நம்ரூத்**

அபூலஹப் என்பவனும் அவனது மனைவியும் இஸ்லாத்திற்கு மாபெரும் எதிரியாக விளங்கினர். இறைத்தூதர் இஸ்லாத்தை எத்தி வைக்கும் பணியில் ஈடுபட்ட போதெல்லாம் அவர்களுக்கு பல இன்னல்களையும் சொல்லொணா கொடுமைகளையும் புரிந்தனர். ஒருமுறை அபூலஹப்பின் மனைவி இறைத்தூதர் வரும் வழியில் முட்புதர்களை நிரப்பி கொடுமை செய்தாள். ''கோத்திரத்தின் தலைவனாக இருப்பதும் செல்வம் மிகுந்தவனாக இருப்பதும் ஒருபோதும் அவர்களை நரக நெருப்பில் இருந்து காப்பாற்றப் போவதில்லை'' என அல்லாஹ் அவர்களை எச்சரித்தான். இறைத்தூதர் எத்தி வைக்கும் தூதின் உண்மை நிலையறிந்திருந்தும் அவர்கள் பிடிவாத குணத்தினால் இறுதிவரை மறுத்தே வந்தனர்.

**அபூலஹப்**

மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் 40 நாட்கள் சினாய் மலைக் குன்றுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் தங்கத்தினாலான பசுக் கன்றைச் செய்து பனூ இஸ்ரவேலர் சமுதாயத்தை வழிபடுமாறு செய்தவனே ஸாமிரி என்பவன். ''மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் உண்மையான கடவுள் எது என்று மறந்துவிட்டார்'' என கூறி மக்களை வழிகெடுத்தான். சினாய் மலைக் குன்றிலிருந்து திரும்பி வந்த மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மக்கள் பசுக் கன்றை வழிபடுவதனைக் கண்ணுற்று கடுங்கோபம் கொண்டார்கள். தங்கத்தினாலான அப்பசுக் கன்றை எரித்தார்கள். மக்களை பொய்யின்பால் வழிகெடுத்த ஸாமிரியைச் சபித்தார்கள்.

**ஸாமிரி**

தன்னை வணங்கி வழிபடுமாறு மக்களுக்கு கட்டளையிட்ட மன்னனே பிர்அவ்ன் என்பவன். அவன் எகிப்திய மக்களுக்கு வழங்கும் உரிமைகளை வழங்காது பனூ இஸ்ரவேலர்களை கொடுமைப்படுத்தினான். பனூ இஸ்ரவேல் கோத்திரத்தில் பிறக்கும் ஓர் ஆண்குழந்தை அவனது ஆட்சியைக் கைப்பற்றும் என குறி சொல்பவன் கூறியதும் அக்கோத்திரத்தில் பிறந்த அனைத்து ஆண் குழந்தைகளையும் கொல்லுமாறு கட்டளையிட்டான். ஆனால், எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றப் போகும் குழந்தையான மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை இறைவன் அதிசயிக்கத்தக்க வகையில் காப்பாற்றினான். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களையும் பனூ இஸ்ரவேலர்களையும் துரத்திச் சென்றபோது பிர்அவ்ன் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டான். மனித சமுதாயத்திற்கே ஓர் அத்தாட்சியாக பிர்அவ்னின் உடலை அல்லாஹ் பாதுகாத்துள்ளான்.

**பிர்அவ்ன்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# சுவனத்தின் கனி மாதுளை

## அறிமுகம்

அரபு மொழியில் மாதுளம் பழம் ரும்மானுன் எனவும் ஆங்கில மொழியில் Pomegranate என்றும் அழைக்கப்படுகின்றது. தமிழ் மொழியில் மாதுளம் பழம் என இப்பெயர் வருவதற்கு சுவாரஷ்யமானதொரு காரணம் கூறப்படுகின்றது. பெண்களின் உள்ளத்தில் பிறர் எளிதில் அறிய இயலாத வகையில் இரகசியங்கள் மறைந்திருப்பது போல, மாதுளம் பழத்தினுள்ளும் பல விதைகள் மறைந்திருப்பதால் 'மாது உள்ளம்' பழம் 'மாதுளம் பழம்' எனப் பெயர் வந்துள்ளதாக கூறப்படுகின்றது. மாதுளம் பழத்தின் தாவரவியல் பெயர் Punica granatum என்பதாகும்.

## மாதுளை மரமும் அதன் பழமும்



மாதுளை மரம் வெப்ப மற்றும் இடைவெப்ப வலயப் பகுதிகளில் விளையும் தாவரமாகும். ஆபிரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிலும் மாதுளை வேளாண்மை செய்யப்படுகின்றது. எமது இலங்கை நாட்டிலும் மாதுளை மரங்களை பல பகுதிகளிலும் பரவலாகக் காணலாம்.

மாதுளை மரங்கள் அடர்ந்த கிளைகளுடன் சுமார் 26 அடி உயரம் வரை வளரக் கூடியன. இலைகள் நீண்டதாக இருக்கும். இவற்றின் பூக்கள் கடும் சிவப்பு நிறத்தில் அழகாக இருக்கும். மாதுளம் பழத்தின் மேற்தோல் அல்லது மேற்பட்டை கனதியாக இருக்கும். எனவே, அதனுள் இருக்கும் விதைகள் பாதுகாக்கப்படுகின்றன. மேற்தோல் சிவப்பு நிறத்திலும் அதன் நுனிப் பகுதி விரிந்து பூ போன்றும் இருக்கும். பழத்தின் அளவைப் பொறுத்து அதனுள் நான்கு முதல் ஏழு வரையில் அறைகள் காணப்படும். அதன் விதைகள் சிவப்பு நிறத்தில் அடர்த்தியாக, இனிமையான, கெட்டியான நீருடன் கூடிய ஒரு சதையினால் சூழப்பட்டிருக்கும். அதனை மெலிதான ஓர் உறை போர்த்தியிருக்கும். மொத்தமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள் உள்ள விதைகள் 200 முதல் 1400 வரை இருக்கும். இந்த விதைகள் யாவும் வெள்ளை நிற துணி போன்ற ஒரு பொருளினால் ஒட்டப்பட்டிருக்கும்.

### வகையும் சுவையும்





மாதுளையில் பிரதானமாக மூன்று வகை இனங்கள் காணப்படுகின்றன. அவை அவற்றின் சுவையை வைத்தே பிரிக்கப்படுகின்றன. அவை இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய மூன்று ரக மாதுளம் பழங்களாகும். இம்மூன்று ரகங்களிலும் வித்தியாசமான சத்துக்களும் குணங்களும் காணப்படுகின்றன. இம்மூன்று மரங்களும் முளைப்பது ஒரே மண்ணில்தான்; அவற்றுக்குப் பாய்ச்சப்படும் நீரும் ஒரே நீர்தான்; ஒரே சூரியக் கற்றைகள் மூலம்தான் உணவையும் உற்பத்தி செய்கின்றன. ஆனால், சுவை மட்டும் வித்தியாசமாக இருக்கின்றது. அது எப்படி? இது இறைவனின் ஓர் அத்தாட்சி. அல்லாஹ் கூறுகின்றான்:

''இன்னும், பூமியில் அருகருகே இணைந்தாற்போல் பல பகுதிகள் (உள்ளன. அவற்றில்) திராட்சைத் தோட்டங்களையும் விளைநிலங்களையும் கிளைகள் உள்ளதும், கிளைகள் இல்லாததுமான பேரீச்சை (வர்க்கத்தை) யும் (அவனே உண்டாக்கினான். இவையனைத்திற்கும்) ஒரே தண்ணீர் கொண்டுதான் பாய்ச்சப்பட்டாலும், அவற்றில் சிலவற்றை வேறு சிலவற்றை விட சுவையில் நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம். நிச்சயமாக இவற்றில் உணர்ந்தறியும் மக்களுக்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன.'' *(13:04)*

பார்ப்பதற்கு பழங்களின் தோற்றம் ஒரே விதத்தில் இருந்தாலும் அவற்றின் சுவையோ வித்தியாசமானது என்பதை அப்படியே கூறும் அல்குர்ஆனிய வசனத்தையும் பாருங்கள். *(பார்வைக்கு) ஒன்று போலவும் (சுவையில்) வெவ்வேறாகவும் உள்ள மாதுளை...) (6:99)*

### மருத்துவக் குணங்கள்





மாதுளையின் இலை, பூ, பழம், தோல், வித்து ஆகியவை அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. 100 கிராம் பழம் உண்டால் அதனால் 83 கலோரி சக்தி கிடைக்கின்றது. மாதுளைப் பழங்களில் இரும்பு, சர்க்கரை, சுண்ணாம்பு, பொஸ்பரஸ் மற்றும் அனைத்து வகையான தாது உப்புக்களும் உயிர்ச் சத்து க்களும் அடங்கியுள்ளன. எனவே, இச்சத்துக்கள் பல்வேறு நோய்களுக்கும் நிவாரணியாகத் திகழ்கின்றன. மாதுளம் பழத்தில் இருக்கும் சில மருத்துவக் குணங்களை இங்கு அவதானிப்போம்.

#### 1. இரத்த நோய்களுக்கு மருந்து

மாதுளம் பழத்தில் அதிகமாக உள்ள இரும்புச் சத்து இரத்தச் சோகையைத் தடுக்க உதவும். இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினின் அளவை அதிகரிக்கும். அத்தோடு, விற்றமின் C இரத்தம் உற்பத்தியாக வழிவகுக்கும். இரத்த இழப்பைக் குறைக்கும். இரத்தத்தை சுத்திகரிக்கவும் உதவும். எனவே, கர்ப்பிணித் தாய்மாருக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் இன்னும் இரத்தத்துடன் சம்பந்தப்பட்ட நோய் இருப்பவர்களுக்கும் மாதுளம் பழம் மிகச் சிறந்த நிவாரணி.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**2. ஞாபக சக்தியைக் கூட்டுகிறது**

மாதுளையில் அடங்கியுள்ள விற்றமின் C சத்தும் இரும்புச் சத்தும் நினைவாற்றலை மேம்படுத்த உதவும். அத்தோடு, மூளையின் சீரான இயக்கத்திற்கும் இது உதவும். எனவே, மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்காக அதிகமாக மாதுளம் பழம் உண்பது அவர்களது ஞாபக சக்தியை அதிகரிக்க வல்லது.

**3. புற்றுநோய்க்கு மருந்து**

மாதுளம் பழத்தில் உள்ள என்டி ஒக்சிடண்ட், பல்வேறு வகை புற்றுநோய்களில் இருந்து எமக்குப் பாதுகாப்பைத் தருகிறது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவர்கள் மாதுளம் பழத்தைப் பரிந்துரைக்கின்றனர். நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது.

**4. சமிபாட்டுக் கோளாறுகளை சீர் செய்கிறது**

சமிபாட்டுக் கோளாறு உள்ளவர்களும் மலச்சிக்கல் உள்ளவர்களும் மாதுளம் பழத்தை உண்பதால் அக்கோளாறுகள் சீராகின்றன. ஏனெனில், அது நார்ச்சத்து உணவாகும். அத்தோடு, இது உமிழ் நீரை அதிகம் சுரக்க வைப்பதோடு உணவுச் சமிபாட்டையும் சீராக்கும்.


**5. அல்சரை குணப்படுத்தும்**

மாதுளம் பழச்சாறு இரைப்பையிலும் குடலிலும் உள்ள புண்களை குணமாக்குகின்றது. பானமாகப் பருகுவதை சிறு பிள்ளைகளும் விரும்புகின்றனர்.

**6. இன்னும் பல**

எலும்புகளுக்கும் பற்களுக்கும் உறுதியை அளிக்கின்றது. சளி தொடர்பான நோய்களை குணப்படுத்துகின்றது. கண் நோயின்போது மாதுளம் இலையை அரைத்து அதனைக் கண் மீது தடவினால் கண் நோய் குணமாகும். மாதுளம் பழத்தின் ஜூஸ், பற்றீரியா எதிர்ப்பு நொதியங்களை அதிகம் சுரக்கச் செய்யும். இது உணவு செரிமானத்துக்கு உதவும். அதனால்தான் வயிற்றுக் கோளாறுகளுக்கு மாதுளம் பழம் சாப்பிடப் பரிந்துரைக்கப்படுகிறது. தேமல், முகப் பரு மற்றும் பிற சரும நோய்களுக்கும் மாதுளம் பழம் சிறந்த நிவாரணி. அதிக உடல் மற்றும் மன உழைப்பால் உடற்சூடும் பித்தமும் கூடி வாந்தி, விக்கல், வாய்நீர்ச்சுரப்பு, குமட்டல், மயக்கம், நெஞ்செரிவு, காதடைப்பு, தலைச்சூடு, கண்ணெரிச்சல் போன்ற நோய்களிலிருந்து விடுபட மாதுளை சிறந்த உணவு.

**சுவனத்தின் கனி**



அல்குர்ஆனில் ஸூரா அல் அன்ஆமின் 99 ஆம் வசனத்திலும் அதே ஸூராவின் 141 ஆம் வசனத்திலும் அவ்வாறே, ஸூரா அர்ரஹ்மானின் 68 ஆம் வசனத்திலும் மாதுளம் பழம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. இதில் ஸூரா அர்ரஹ்மானின் 68 ஆம் வசனத்தில் சுவனத்தில் இருக்கும் கனிகளைப் பற்றிக் கூறும்போது அல்லாஹ் மாதுளம் பழத்தையும் சேர்த்துக் கூறியுள்ளான். சுவனத்துக் கனிகளில் மாதுளையும் ஒன்றென்றால் அதன் முக்கியத்துவத்தை இங்கு எம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.

நோய்கள் வந்ததும் வைத்தியரை நாடி மாத்திரைகளை வாங்கிக் குடிக்கும் நாம் அதே மாத்திரைகள் எதிலிருந்து தயாரிக்கப்படுகின்றனவோ அந்த காய்களையும் கனிகளையும் நோய் வருவதற்கு முன்பே உட்கொண்டால் எவ்வளவு ஆரோக்கியமாக வாழலாம். அடிக்கொரு முறை ஒரு மாதுளம் பழத்தை வாங்கி உண்டு வாருங்கள். அல்லாஹ்வின் அருளினால் சிறு சிறு நோய்கள் தீரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணிய மறுத்த அராபியர்களையும் கலிபா உமர் தமது உறுதியான ஆட்சியினால் அடக்கினார். இஸ்லாத்தின் அடுத்த கலிபாவாக உஸ்மான் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் எளிமை மிக்கவர். தாராள சிந்தை மிக்கவர். சமுதாயத்திலே கிளர்ச்சிக்காரர்கள் தோன்றுவதை அவர் அடக்கவில்லை. இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் கலகம் ஒன்றினை உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்றினை எதிர்பார்த்து நின்றனர்.

# கொள்ளை

**எம்.ஏ. ரஹ்மான்**

தங்களுடைய தேசாதிபதியின் அடக்குமுறைகளைத் தாங்க முடியாதவர்களாக எகிப்தியர் கலீபா உஸ்மானிடம் முறையிட்டார்கள். கலீபா மேற்படி தேசாதிபதியைப் பதவி நீக்கம் செய்தார். வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த உத்தியோகத்தரைச் சுற்றிச் சதிவலை ஒன்று பின்னப்பட்டது. அதிருப்தி அடைந்திருந்த ஏனையோரும் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். இவ்வாறு கரேஜி கட்சி உருவாக்கப்பட்டது. கரேஜிக் கட்சியினர் கலீபாவின் ஆட்சியை எதிர்ப்பதெனத் தீர்மானித்தனர்.

ஒரு சரியான சந்தர்ப்பத்திலே கரேஜிக்காரர்கள் கலீபாவின் வீட்டினை முற்றுகையிட்டனர். மதீனத்திலே வாழ்ந்த முஸ்லிம் தலைவர்களை இச்செயல் வருத்தியது. அவர்கள் தூதுவர் ஒருவரைக் கலீபாவின் சமுகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அவர் கலீபாவிடம் பின்வருமாறு கூறினார்:

''அமீருல் முஃமினீனே! எங்களுடைய உயிரையும் சொத்துக்களையும் பணயம் வைத்து இறைத் தூதருக்கு உதவி செய்தோம். தங்களுக்கு முன்னர் ஆட்சி செய்த இரண்டு கலீபாக்களும் எங்களுடைய உதவியைப் பெற்றார்கள். அதேபோன்று காழ்ப்பற்ற உதவியைத் தங்களுக்கும் தர நாங்கள் ஆயத்தமாக உள்ளோம். உத்தரவிடுங்கள். இந்த உலகத்திலிருந்து கரேஜியர்களை அழித்துத் துடைத்து எறிகின்றோம்.''

இந்தத் தூது கலீபா உஸ்மானுக்கு மிகுந்த ஏக்கத்தை அளித்தது. உடனே, ''இல்லை. அத்தகைய உத்தரவு ஒன்றினை நான் எப்பொழுதும் பிறப்பிக்கவே மாட்டேன். முஸ்லிம்களுக்கிடையிலேயே யார் முதலிலே கலகத்தைத் தூண்டிவிட்டு அதனால் இரத்தப் பெருக்கினை ஏற்படுத்துகின்றானோ அவன் செய்கின்ற பாவம் முழு உலகத்திலும் சேமிக்கப்பட்ட பாவத்திலும் பார்க்க மிகவும் அதிகமாகும். அந்த முதல் முஸ்லிமாக நான் இருக்க விரும்பவில்லை. உங்களுடைய வாள்களை மீண்டும் உறைகளிலே போட்டுக் கொள்வீர்களானால் நீங்கள் உண்மையில் என் நண்பர்களாக நடந்து கொள்வீர்கள்'' என கலீபா பதிலளித்தார்.

அத்தலைவர்கள் மிகுந்த அச்ச உணர்வு கொண்டிருந்தார்கள் எனினும், கலீபாவின் விருப்பப்படி நடந்தார்கள். சிலர் கலீபாவினுடைய வாசலைக் காவல் செய்யத் தொடங்கினார்கள். ஆனாலும், அவர்களால் கலீபாவைக் காப்பாற்ற முடியவில்லை.

ஒருநாள் இரவு கரேஜியர்கள் இருவர் வீட்டின் பின்புறச் சுவரேறிக் குதித்து கலீபா உஸ்மானின் நெஞ்சிலே பெரிய கத்தி ஒன்றினைப் பாய்ச்சினார்கள்.

இவ்வாறு கலீபாவுக்கு மரண காயம் ஏற்படுத்தப்பட்டது. அவர் விரைவாகத் தமது பலத்தை இழந்து கொண்டிருந்த போதிலும் ஆகாயத்தைப் பார்த்து அமைதியான தெளிவான குரலில், ''கருணையுள்ள அல்லாஹ்! என் கொலைக்குப் பதிலாக என்னுடைய மக்களுடைய ஐக்கியப் பிணைப்பினை மேலும் பலப்படுத்துவாயாக!'' என இறைவனைப் பிரார்த்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேனைப் பிரித்தெடு; தேன் கூட்டைக் கலைத்து விடாதே

மென்மை நிச்சயமாக செயல்களை செம்மையாக்கும்; அலங்கரிக்கும். செயல்களில் மென்மை குறையும் போது அவை சீர்குலைந்துபோகும். பேச்சில் மென்மை, பிறரை சந்திக்கும்போது வெளிப்படுகின்ற உண்மையான புன்னகை, நல்ல சொற்கள், நல்லவர்கள், அழகிய ஆடைகள் இவையெல்லாம் இறை நம்பிக்கையாளர்களது பண்புகள். இவை தேனீயைப் போன்றவை. தேனீ நல்லதை உண்டு, நல்லதை செய்கின்றது. அது பூக்களில் அமரும்போது பூக்களை அழிப்பதில்லை. பொதுவாக மனிதன் வன்மையால் பெற முடியாதவற்றை மென்மையால் பெறுகின்றான்; இது இறை இயல்பு.

நல்ல மனிதர்கள் ஒரு பகுதிக்கு வரும்போது அவர்களை காண்பதற்காக மக்கள் போட்டி போடுவார்கள். அவர்களது வருகையை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். உள்ளங்கள் அவர்களை வாழ்த்தும். ஆன்மாக்கள் அவர்களைத் துதிக்கும். ஏனெனில், கனிவான பேச்சு, கொடுக்கல் வாங்கலில் நேர்மை உள்ளிட்ட உயர்ந்த பண்புகளால், நற்செயல்களால் அவர்கள் மக்களைக் கவர்கிறார்கள். மக்களும் அவர்களை நேசிக்கிறார்கள். அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள்.

''மிகச் சிறந்த நன்மையைக் கொண்டு நீர் தீமையை தடுப்பீராக. அப்போது உம்மிடம் கடும் பகைமை கொண்டிருந்தவர் கூட உற்ற நண்பராய் ஆகிவிடுவதைக் காண்பீர்.


**எம்.எல்.எப். சப்னியா**
**பாத்திமா ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி**
**ஓட்டமாவடி**

# அறிவுக்கு விருந்து

01. நவீன உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் 'தைபூ' அணை எந்த நாட்டில் அமைந்துள்ளது? நியூஸிலாந்து
02. உலகின் மிக உயரமான அணை எது? தெஹ்ரி அணை
03. தோலில் அமைந்துள்ள மிகச் சிறிய துளை வழியாக முடிகள் வளருகின்றன. அந்த துளைக்கு வழங்கும் மருத்துவப் பெயர்? போலிக்லஸ்
04. தோலுக்கு நிறம் அளிக்கும் நிறமி எது? மெலியன்
05. ரொக்கட் என்பதன் செல்லப் பெயர்? பேர்ட்
06. புன்னகையை வரவழைக்கும் எலும்பு மனித உடலில் எந்த இடத்தில் உள்ளது? தலைப் பகுதியில் அமைந்துள்ள தாடை எலும்பு

**எம்.எம். தஸ்னீம் பானு**
**பாத்திமா ஷஹ்ரா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**

# நேசித்தேன்



வானத்தை நேசித்தேன்
தொட முடியவில்லை
காற்றை நேசித்தேன்
பார்க்க முடியவில்லை

கடலை நேசித்தேன்
தாண்ட முடியவில்லை
இயற்கையை நேசித்தேன்
தொட்டுப் பார்க்க முடியவில்லை

பூவை நேசித்தேன்
பூவாக இருக்க முடியவில்லை
மலையை நேசித்தேன்
ஏற முடியவில்லை
நட்பை நேசித்தேன்
மறக்க முடியவில்லை...

**ஏ.ஐ.எப். இபாமா**
**மே/ பலாந்தை.மு.வி**
**அலவத்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்தனைத் துளிகள்

- பெரியோருக்கு கருணை காட்டு;
  சிறுவர்கள் உனக்கு அன்பு காட்டக் கூடும்...
- பெற்றோரை மதித்து நட;
  உன் பிள்ளைகள் உன்னை மதிப்பார்கள்...
- ஆசானுக்குப் பணிவிடை செய்;
  அறிவால் நீ அறிஞனாகலாம்...
- தோல்வியைக் கண்டு பயந்துவிடாதே;
  அது உன் வெற்றிக்குரிய முதல் படியாக இருக்கலாம்...
- எதிரியைக் கூட நண்பனாய் பார்;
  உன் நட்பைக் கண்டு அவன் நண்பனாகலாம்...
- செல்வத்தைக் கொண்டு தர்மம் செய்;
  அந்த தர்மம் உன்னை தலைகாக்கும்...
- ஒருவருக்கும் அநீதி இழைக்க நினைக்காதே;
  அநீதி இழைத்தால் நீ அநீதி இழைக்கப்படுவாய்...


**செய்னுதீன் ஸாஹிப்**
**மர்கஸ் தாருல் ஈமான்**
**சம்மாந்துறை**

# சொல் அமுதம்

| மிருகங்கள் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| புலி | ஓ | பிணா |
| நரி | ஓரி | பாட்டி |
| யானை | களிறு | பிடி |
| மான் | கலை | பிணை |
| குதிரை | மா | பெட்டை |
| எருமை | ஏறு | ஆண் |
| பூனை | கடுவன் | பெட்டை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| ஆடு | கடா | மறி |
| மாடு | எருது | பசு |

**டீ.எம்.எப். முன்ஸிபா**
**ஆயிஷா பாலிகா ம.வி.**
**வாழைச்சேனை**

# நிகழ்காலம்



அவன் ஒரு வியாபாரி. எதிர்காலத்தில் பெரிய தொழிலதிபராக வர வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், சரியாகத் திட்டமிட்டுச் செயற்படாததால் அவன் பெரிய நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தது.

மிகுந்த கவலையில் ஆழ்ந்த அவன் வீட்டுக்குப் போக மனமில்லாமல் ஊரை விட்டு ஒதுக்குப்புறமாக இருந்த ஆற்றங்கரைக்குப் போனான். அங்கே மெல்லிய நிலா வெளிச்சத்தில் ஆற்று மணலில் அமர்ந்து நினைவுகளை ஓட விட்டான். வியாபாரத்தில் தோற்றுப்போன அவலம் அவனை அழுத்தியது. பங்குதாரர்கள் எப்படியெல்லாம் தனக்குத் துரோகம் செய்தார்கள், நம்பவைத்துக் கழுத்தறுத்தார்கள் என்று எண்ணியெண்ணி வேதனையில் மூழ்கினான்.

தொடர்ந்து எப்படி வியாபாரம் செய்யப் போகிறோம், குடும்பத்தை எப்படி நடத்தப் போகிறோம் போன்ற எதிர்காலக் கவலைகள் ஒரு புறம் எழுந்து அடங்கின. இந்தச் சிந்தனையினூடே அவன் வலக்கை அவனை அறியாமல் ஆற்று மணலைத் துழாவி கைக்குத் தட்டுப்பட்ட சிறு சிறு கற்களை எடுத்து ஆற்றில் வீசியவண்ணம் இருந்தது. இப்படியாக அவன் அன்றிரவு முழுவதும் அங்கேயே கழித்தான்.

பொழுது விடிய ஆரம்பித்தது; வெளிச்சம் பரவியது. ஆற்றிலே வீசுவதற்கு அவனைச் சுற்றி இருந்த கற்கள் எல்லாம் தீர்ந்து போயின. அவன் தன் கையில் இருந்த கடைசிக் கல்லைப் பார்த்தான்; பிரமித்து விட்டான். காரணம் அது சாதாரண கூழாங்கல் இல்லை. விலை உயர்ந்த வைரக்கல். யாரோ கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்து வந்த வைரக்கற்களை ஆற்றங்கரையிலே தவறி விட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள். அவற்றைத்தான் அவன் இருட்டில் இன்னதென்று அறியாமல் எடுத்து வீசியிருக்கிறான்.

ஆங்கிலத்தில் நிகழ்காலத்திற்கு Present என்பார்கள். Present என்றால் பரிசு என்ற இன்னொரு கருத்தும் அதற்கு இருக்கிறது. ஒரு வகையில் பார்த்தால் நம்மில் பலர் அந்த வியாபாரி மாதிரிதான். கடந்த காலம் மற்றும் எதிர்கால நினைவுகளில் மிதந்து கொண்டு நிகழ்காலம் பரிசாகக் கிடைக்கப் பெற்ற வைரக்கற்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

**அலிலுல்லாஹ் ரிப்னாஸ்**
**தி/அல்தாரிக் மஹா வித்தியாலயம்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





| | |
|---|---|
| செஞ்சிலுவை | - மருத்துவ உதவி |
| வெள்ளைக் கொடி | - சமாதானம், துக்கம் |
| மஞ்சள் கொடி | - தொற்று நோய் |
| தாமரை | - பண்பாடு |
| ஒலிம்பிக் | - தீப்பந்தம் |
| மேல்நோக்கி செங்குத்தான கொடி | - வெற்றி ஆரம்பம் |
| சிவப்பு சக்கரம் | - அபிவிருத்தி |
| கறுப்பு கொடி | - எதிர்ப்பு, மரணம், சோர்வு |
| சிவப்பு விளக்கு | - மருத்துவமனை |
| சிவப்பு முக்கோணம் | - குடும்பக் கட்டுப்பாடு |
| சிவப்புக் கொடி | - உலக தொழிலாளர் அமைப்பு |

## சர்வதேச குறியீடுகள்

**ஆலிப்கான் ஜெஸ்மி**
**தரம் - 6**
**சுமையா மகளிர் அ.க.**

# பச்சை வீட்டு விளைவு
## (Green house effect)





குளிர்ப் பிரதேசத்தில் கண்ணாடியினாலான கூரை களைக் கொண்ட கட்டடங்களினுள் சில தாவரங்கள் பயிரிடப்படுகின்றன. இவ்வாறான அமைப்பு பச்சை வீடு எனப்படும். கண்ணாடிக் கூரையின் ஊடாக உள்ளே வரும் சூரியக் கதிர்ப்பிலுள்ள குறைந்த அலை நீளமுடைய புறவூதாக் கதிர்களைப் பச்சை வீட்டினுள் இருக்கும் கூறுகள் உறிஞ்சிக் கொண்டு, கூடிய அலை நீளமுடைய செங்கீழ்க் கதிர்களாக வெப்பத்தை வெளிவிடுகின்றன. இக்கதிர்களை வெளியேற விடாது கண்ணாடிக் கூரை தடுத்து நிறுத்துகின்றது. எனவே, பச்சை வீட்டினுள் வெப்பநிலை குறையாது பேணப்படுகின்றது.

இதேபோன்ற ஒரு நிகழ்வு வளிமண்டலத்திலும் நிகழ்கின்றது. சூரியனிலிருந்து வரும் கதிர்கள் புவித்தரையில் மோதும்போது, தரையானது வெப்பத்தை செங்கீழ்க் கதிர்களாக வெளிவிடுகின்றது. இக்கதிர்களை வளியிலுள்ள நீராவி, காபனீரொட்சைட்டு, மெதேன் ஆகிய வாயுக்கள் உறிஞ்சிக் கொள்கின்றன. இதனால் புவித்தரைக்கு அண்மையில் உள்ள பகுதி வெப்பமடைகின்றது. இதுவே பச்சை வீட்டு விளைவு எனப்படும்.

அதிகளவு எரிபொருட்கள் எரிக்கப்படுவதால் வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட்டின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இதனால் புவி மேற்பரப்பின் வெப்பநிலை அதிகரிக்கும். இவ்வாறு புவி மேற்பரப்பின் வெப்பநிலை அதிகரிக்கும்போது துருவங்களிலுள்ள பனிப்பாறைகள் உருகத் தொடங்கும். இதனால் சமுத்திரங்களின் நீர்மட்டம் அதிகரிக்கும். இதேபோன்று இன்னும் பல தீய விளைவுகளினால் சூழற் சமநிலை குலைந்து போகும்.

**உமாரா பின்தி முஸம்மில்**
**வடதெனிய**

## இருதய சக்தியை வழங்கும் மருந்து



பணிவு எனும் மரச் சாற்றுடன் ஏழ்மை எனும் சாற்றையும் எடுத்துக்கொள். அதனுள் தௌபா எனும் மூலிகையை இடு. போதும் என்ற கருவியால் அதை அரைத்து பக்தி எனும் நீரையும் சேர்த்து ஊற்றி அன்பு எனும் நெருப்பில் அதை சூடாக்கி நன்றி எனும் குவளையில் அதை இடு. ஆதரவு என்ற விசிறியால் அதனை ஆற்று. பின்பு புகழ் என்ற கரண்டியால் தினமும் பருகு. நீ இவ்வாறு செய்தால் உனது பாவங்கள் ஒழிந்து இதயம் சக்தி அடைவதோடு இம்மை, மறுமை இரண்டிலும் உனது எல்லா நோய்களும் தீரும்.

**எம். ருஸ்தா ரமீஸ்**
**கு/அல்ஹூதா மு.ம.வி**
**ரிதீகம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. வித்ர் தொழுகை ஒரு பிரதான சுன்னத்துத் தொழுகையாகும். 'வித்ர்' என்பதன் அர்த்தம் 'ஒற்றை' என்பதாகும். இத்தொழுகை ஆகக் குறைந்தது ஒரு ரக்அத்து. ஆகக் கூடியது எத்தனை ரக்அகத்துகளாகும்?
2. அல்லாஹுத்ஆலாவுக்கு அவசியம் இருக்க வேண்டிய (வாஜிபான) ஸிபத்துகளில் ஒன்று 'முரீதுன்' ஆகும். இதன் கருத்து யாது?
3. 'தூய்மைப்படுத்தலின் தொழுகை' என்றழைக்கப்படும் சுன்னத்தான தொழுகை எது?
4. 'பஹ்தானியத்துன்' என்பதன் கருத்து யாது?
5. இமாம் அபூஹனிபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஹிஜ்ரி 80 இல் ஸாபித் என்பவருக்கு மகனாகப் பிறந்தார்கள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நுஃமான். அபூஹனிபா என்பது இவரது புனைப் பெயராகும். இமாம் அவர்கள் பிறந்த ஊர் எது?
6. ரசூல்மாருக்கு அறவே இருக்க முடியாத (முஸ்தஹீலான) ஸிபத்துக்கள் நான்கும் எவை?
7. அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆட்சியைத் தொடர்ந்தவேளை போலி நபிகள் உருவாகி மக்களை மாய வலையில் சிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்நிலைமையைப் போக்கி மக்களை நேரான வழியின்பால் எடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போகவே கலீபா அவர்களுக்குப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட படைப் பிரிவின் தலைவராக கலீபா அவர்களால் நியமிக்கப்பட்டிருந்தவரின் பெயர் என்ன?
8. 'இரவல் கொடுத்தல்' என்பது அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
9. அல் அமீன் என்ற பட்டம் கிடைக்கும்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு எத்தனை வயது?
10. 'அபூ முஹம்மத்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
11. புனித அல்குர்ஆனை 7 மன்ஸில்களாகவும் 30 ஜுஸுக்களாகவும் பிரித்தவரின் பெயர் என்ன?
12. கலீபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் பிரதிநிதி) என்ற சிறப்புப் பெயருக்குரிய நபியின் பெயர் என்ன?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. 90 சதவீதமான அல்பேனிய முஸ்லிம்கள் வாழும் கொசோவா, சேர்பியா ஆகிய இரு தரப்பும் எந்த நாட்டின் மாநிலங்களாக இருந்தன?
2. தமிழகத்தின் ஒரு தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா 40 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளால் வெற்றியீட்டியதன் மூலம் மீண்டும் தமிழக முதலமைச்சரானார். அவர் வெற்றியீட்டிய தேர்தல் தொகுதியின் பெயர் என்ன?
3. ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் அணுகுண்டு போடப்பட்டது எப்போது?
4. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் கவிஞர் ஒருவர் சிறந்த மேடைப் பேச்சாளராவார். இவரது சொற்பொழிவாற்றலைக் கேள்வியுற்ற தமிழகத்து அறிஞர்கள் அன்னாரை அழைத்துச் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். நூற்றுக்கணக்கான தமிழக மேடைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்திய அப்பெரியாரின் ஆற்றலைக் கண்டு அதிசயித்த முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் அன்னாருக்கு ஈழத்துக்குப் பெருமை தரும் விருதொன்றை வழங்கிக் கௌரவித்தார். அப்பெரியாரின் பெயர் என்ன?
5. இந்திய செய்தி ஸ்தாபனமான PTI என்பதன் விரிவான பெயர் யாது?
6. குறித்த பொருட்கள் சிலவற்றுக்கான தீர்வைகளை நீக்குவது அல்லது குறைப்பது அல்லது ஓரளவு குறைப்பது என்ற வழிமுறைகளில் 1998 டிசம்பர் 28 இல் இலங்கையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. இதில் இலங்கையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடு எது?
7. சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## أكتُب اسم صاحب المِهنة تحت الصُّورة



شـ .....................



حـ .....................



سـ .....................



صـ .....................



حـ .....................



إ .....................



غـ .....................



حـ .....................



ر .....................



مـ .....................



إ .....................



بـ .....................

## اختر الكلمة الصحيحة واكتبها في الفراغ

1. مَا لَوْنُ ....................... الرَّجُلِ؟ — بَشْرَة \ بَشَرَة
2. الصِّدْقُ ....................... مُهِمَّةٌ؟ — خَصْلَة \ خُصْلَة
3. على الدَّبَّابَة ....................... ضَخْمٌ؟ — مَدْفَع \ مِدْفَع
4. لا تأكل الـ ....................... الحيوانيَّ. — دهْن \ دُهْن
5. إقرأ إسم الـ ....................... على الخطاب. — راسِل \ مُرسِل
6. في الغرفة ....................... جميلة. — سَجَّادَة \ سِجَّادَة
7. تجلس الأ سرة في ....................... المَنْزِل. — فَناء \ فِناء
8. كم ....................... في النصِّ؟ — فَقَرَة \ فقْرَة






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# صِلْ بَينَ الكَلِمَتين المُترادِفَتَين

## صِلْ بين الكلمتين المُترادِفتَين والصُّورَةِ المُناسِبَة

| | |
|---|---|
| الجابي | حَشيش |
| بَحَار | كرسِيّ |
| راية | رُبَّان |
| معدِّيَة | سَيف |
| عُشب | فلاح |
| مزارع | المُحَصّل |
| مَقعَد | معجَم |
| قاموس | ملاح |
| قُبْطان | عبَّارة |
| حُسام | غَطَّاس |
| سَحاب | غَيْمٌ |
| غَوَّاص | عَلَمٌ |










# التَّمييزُ بَينَ الكلمات المتَشابِهة

إختر الكلِمَةَ الصَّحيحَة, واكتبها في الفراغ.

1. ماذا نتناول في ................ رمضان؟ — سُحور \ سَحور
2. هل في عالمنا شعُوبٌ ...............؟ — بُدائيَّة \ بِدائِيَّة
3. أخي طبيب ................ في العيون؟ — إخْصائيٌّ \ إخْتِصاصيٌّ
4. أجرَيتُ ............... في مختبر العلوم. — تَجرُبَة \ تجرِبَة
5. والِدي مندوبُ ............... في الشَّرِكة. — المُشتَروات \ المُشتَرَياتِ
6. أرسلتُ ............... لِصديقي, لِيَحْضُرَ الحفلَ. — دَعوَى \ دَعوةً
7. أتناول ال ............... في البَيت. — فُطور \ فَطور
8. اِجتَمَعَ ال................ مَعَ الوَزير. — مُديرونَ \ مُدَراء



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## *Assalamu alaikum friends!*

Hope all of you are enjoying reading the Aharam English page. Yes, for a change, why don't I introduce someone new, to lead you to the fun filled world of English?

Here comes Shathir Naleer, a student of St Sylvester's College who is keen in providing you with something really interesting. He has just done his O/Ls and is waiting for the results.

So, what are you waiting for? Come have fun learning English with someone of your own.

**All of us expect to live a healthy life. With good food habits and by doing exercises daily you can be on your way to live your healthy life. It is easy to say, but at times it is not so easy to do.When someone asks you "how are you?" you would say "I am fine" but are you really living a healthy life? If not then follow the five simple steps I give you to lead a healthy life.**

✓ ***Get active each day***

Doing exercises regularly is very important in maintaining your healthy growth, development and well-being. We should at least do exercises for sixty minutes a day which means that we should spend one hour of our precious time to maintain our health. We should include exercises that strengthen our bones and muscles on at least three days a week so that we will not have to drink bone strengthening drinks when we get old.

✓ ***Choose water as a drink***

Water is the best way to fulfill your thirst and it doesn't come with the added sugar found in other fruit juices and soft drinks. Eat a whole fruit rather than drinking fruit juices containing a lot of sugar.

✓ ***Eat more fruits and vegetables***


Eating fruits and vegetables helps you to grow and develop. It boosts your vitality and can reduce the risk of many diseases. Try to eat two fruits and five vegetables every day. Have fresh fruits as a convenient snack and try to include fruits and veggies in every meal.

✓ ***Switch off the screen and get active***

You would be overweight and obese if you spent time watching TV, surfing the internet or else if playing computer games constantly. You shouldn't spend more than two hours on the TV and computer. Alternative to these "screen entertainment" play a range of active indoor and outdoor games.

✓ ***Eat fewer healthy snacks***

Healthy snacks help you to meet your daily nutritional needs. Snacks based on fruit and vegetables, reduced fat dairy products and whole grains are the healthiest choices. Avoid snacks that are high in sugar or fat such as chips, cakes and chocolates. It can increase your weight.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## **Hadith** of the month


Anas was a small child when he served the prophet muhammed (sallallahu alaihi wasallam). About his time there; he narrated that, 'I served the prophet for ten years and he never said to me "Uf" (a harsh word denoting impatience or displeasure) and never blamed me by saying, "why did you do so or why didn't you do so?' (Bukhari)

### Here is something to *Laugh* a little bit


Kevin: Who comes to a picnic but is never invited?
George: Ants



## Some facts you don't know



- It is impossible for most people to lick their own elbow.
- A crocodile cannot stick its tongue out
- The "sixth sick sheik's sixth sheep's sick" is believed to be the toughest tongue twister in the English language.
- If you sneeze too hard, you could fracture a rib.
- Wearing headphones for just an hour could increase the bacteria in your ear by 700 times
- Like fingerprints, everyone's tongue prints are different.
- Rubber bands last longer when refrigerated.
- A shark is the only known fish that can blink with both eyes
- Most people fall asleep in seven minutes.
- The scientific name for rice is "Oryza sativa".



## Your Corner

### The merry Mice


The merry mice stay in their holes
and hide there all the day
but when the house is still at night
the rogues come out and play
They climb upon the pantry shelf
and taste of all they please
they drink the milk that's sat for cream
and nibble bread and cheese
But if they chance to hear the cat
their feast will soon be done
they scamper off to hide themselves
As fast as they can run



**N. H. Ihmaz Muhammadh**
**Grade 13 commerce (2016)**
**Zahara (national school) college**
**Puttalam**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# My Self

Hi friends, I am Hasna Jahas from Gurutalawa.I am eleven years old and studying in grade six. My school is B/Al Ilma Muslim vidyalaya.My father is Mr Naushad ,he is an ISA in Welimada Education zonal office. My mother is Mrs Isara Naushad. She is a teacher at our school and she teaches Sinhala language. My sister is Aysha Jahas and brother is Mohamed Husni. I like playing and reading and consider them as my leisure time activities. My favorite subjects are Sinhala, Tamil and English. I am fond of ice cream and fruits. I have lots of friends. Athaaf Deen is my best brother friend. I want to be good Muslim woman and a doctor in my future. So pray for me for my best future.

**Hasna Jahas**
**B/A ilma m.v.**
**Gurutalawa**



# Library

- A library is a store house of knowledge.
- A library renders a great service to the society.
- a library plays a very important role in promoting knowledge.
- Many people read books in a library.
- We can get membership in a library.
- We can burrow books as well.
- Reading is a good habit
- Reading makes us good and worthy children.

**M.F. Fazal Ahmed**
**Grade: 10**
**Ameeniya Arabic College,**
**Kurunegala Road, Nikawaratiya.**

# MY Best Friend



**Fathima Afra**
**Al-Hikma college**
**Colombo - 12**

I Have Many friends. But Mohamed is the one I Like most we have know each other since we were in grade 09. He is a fall and Pale boy with straight short hair. He is known to be cheerful, Friendly and hard working.

Mohamed is kind hearted and is always willing to help others. Most of the time he helps me with science and history. Mohamed is an avid reader and interesting to ride bicycle and his ambition is to become a good pilot oneday. He is usally punctual, but sometimes he is a little absent minded. As he is a good friend, I always enjoy his company. I wish him all the best. I think my friend is a gift of god. for me.

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

| | | |
|---|---|---|
| A 61/ 5 ,<br>Zahira Road, Mawanella | Or | Mail me to<br>aharamenglish@gmail.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரியோர்களின் வாழ்வில்...

அமெரிக்காவில் கார்ட்டியஸ் என்ற ஒரு நகை வியாபார நிறுவனம் இருந்தது. வருடா வருடம் கோடிக்கணக்கான டொலர்களுக்கு இங்கு வியாபாரம் நடைபெறும். உலகப் பிரமுகர்கள், அரசர்கள் என்று பிரபல்யமானவர்களுக்கு தேவையான இரத்தினக் கற்கள் இங்கிருந்தே விற்கப்பட்டன.

பிரான்ஸில் குடியிருந்த ஓர் இந்திய மகாராஜாவுக்கு தனது தலைப்பாகையில் வைத்துக் கொள்ள விலை உயர்ந்த நீலக்கல் ஒன்று தேவைப்பட்டது. அதன் எடை 150 காரட் ஆகும். அதனது விலை பல இலட்சம் டொலர்களாக இருந்தன.

இத்தகவலைக் கேள்விப்பட்ட நகை விற்பனை நிறுவனம் பாரிஸ் நகரில் உள்ள தனது கிளை நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டது. அங்கிருந்த ஜால்ஸ் (க்ளான்ஸர்) என்ற திறமையான விற்பனைப் பிரதிநிதி உடனடியாக மகாராஜாவிடம் சென்று மகாராஜாவைச் சந்தித்து நீலக்கல்லின் மகிமையை எடுத்துக் கூறினார். மகாராஜாவுக்கு கல் மிகவும் பிடித்துவிட்டது. ''விலை பற்றிப் பிரச்சினையில்லை. மகாராஜா கல்லை எடுக்கச் சம்மதிக்கிறார்'' என்று காரியதரிசி கூறினார்.

விற்பனையாளர் கல்லை மேலும் வர்ணிக்க விரும்பினார். திறமையான விற்பனையாளர் அல்லவா! தனது திறமையைக் காட்டாமலா விடுவார். அவர் கூறினார், ''இந்தக் கல் சாமான்யமானதல்ல. பிரஞ்சு அரசன் 6 ஆம் லூயி அணிந்திருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்'' என்று கூறி கல்லின் மகிமையை மேலும் விளக்கினார். அப்படிக் கூறினால் மகாராஜா மேலும் மகிழ்ச்சியடைவார் என்பது விற்பனையாளரின் எண்ணம். காரியதரிசி மகாராஜாவிடம் இதனை மொழிபெயர்த்துக் கூறினார். உடனே மகாராஜாவின் முகம் பேயறைந்தாற்போல் மாறுவதைக் கவனிக்க முடிந்தது. உடனே மகாராஜா ''இந்தக் கல் எனக்கு வேண்டாம். எடுத்துக் கொண்டு போகச் சொல்'' என கூறிவிட்டு உடனே எழுந்து சென்று விட்டார்.

விபரம் புரியாத ஜால்ஸ் க்ளான்ஸர் திகைத்துப் போனார். காரியதரிசி விளக்கினார். ''16 ஆம் லூயி மன்னன் பிரான்ஸியப் புரட்சியின்போது சிரச்சேதம் செய்யப்பட்டு இறந்தார் அல்லவா? அதனால் இது ராசியில்லாத கல் என்று மகாராஜா எண்ணுகிறார்'' எனக் கூறி காரியதரிசி விளக்கியதும் தனது அதிகப்பிரசங்கித்தனத்தை நொந்து கொண்டே அங்கிருந்து அகன்றார் விற்பனைப் பிரதிநிதி.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 11
2. நாட்டமுடையவன்
3. தஸ்பீஹ் தொழுகை
4. ஒருவனாயிருத்தல்
5. கூபா
6. கிதுபு, கியானத், கித்மான், பலாதத்
7. காலித் இப்னு வலீத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
8. அல் ஆரியாஹ்
9. 23 வருடங்கள்
10. இமாம் ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
11. ஹஜ்ஜாஜுத் தகபி
12. நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்

**பொது அறிவு**

1. யூகோஸ்லாவியா
2. ஆண்டிப்பட்டி
3. 06.08.1945 இல்
4. நாவலர் ஈழமேகம் பக்கீர்த் தம்பி
5. Press Trust of India
6. இந்தியா
7. வியன்னா நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 07

## பொலன்னறுவைக் காலம்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

அனுராதபுர ஆட்சியின் இறுதியில் நடைபெற்ற சோழர் படையெடுப்புகள் அனுராதபுர ஆட்சியின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகின. தென்னிந்தியாவின் மகா அலெக்ஸாண்டர் என வரலாற்றாசிரியர்களால் போற்றப்படுகின்ற இராஜ இராஜ சோழன் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படைபெயடுப்பு இலங்கையின் வட பகுதியை சோழர் ஆட்சியில் ஒரு மாகாணமாக்கியது. இம்மன்னனது மகனான முதலாம் இராஜேந்திரன் கி.பி. 1017 இல் மேற்கொண்ட படையெடுப்பு முழு இலங்கையையும் சோழர்களின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தியது. அனுராதபுர அரசியலின் கடைசி மன்னனான 5 ஆம் மகிந்தன் சிறை பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டான். இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரில் சோழ அரசின் ஒரு மாகாணமாக மாற்றப்பட்டது. தலைநகரம் பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டு ஜனதாத மங்கலம் என்ற பெயர் சூட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலன்னறுவை இலங்கை வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கியது. சோழர்கள் 1017 இல் ஆரம்பித்து வைத்த பொலன்னறுவைக் காலம் 1235 இல் கலிங்க மாகனோடு முடிவுக்கு வந்தது. சுமார் 2 1/2 நூற்றாண்டுக்குரிய இக்காலப் பிரிவே இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொலன்னறுவைக் காலம் எனப்படுகின்றது.

இக்காலப் பிரிவில் முஸ்லிம்களின் வாழ்வும் அவர்களது அரசியல் சமூகப் பங்களிப்புகளும் பல அரிய உண்மைகளை உள்ளடக்கி இருப்பதை வரலாற்று நூல்களைப் படிக்கும்போது உணர முடிகின்றது. பேராசிரியர் எஸ். பரணவிதாரண இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''பொலன்னறுவைக் காலப் பிரிவில் வணிகர்களில் குறிப்பிடத்தக்க அளவு முஸ்லிம்கள் வாழ்ந்துள்ள போதிலும் அதனை நிறுவக் கூடிய இலக்கிய ஆதாரங்களோ, சாசனவியல் சான்றுகளோ இல்லாதிருப்பது பெரும் குறையாகும்.''

பேராசிரியர் பரணவிதாரண இலங்கையின் புகழ்பூத்த தொல்பொருளியல் துறை அறிஞரும் வரலாற்றுப் பேராசிரியருமாவார். அவரது மேற்குறித்த கூற்று கணிசமான முஸ்லிம்கள் பொலன்னறுவைக் காலப் பிரிவில் வாழ்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.

பொலன்னறுவைக் காலப் பிரிவின் முதல் பகுதி சோழர் ஆதிக்கத்தில் இருந்தது. இக்காலப் பிரிவில் முஸ்லிம்களது பண்பாடு, பணிகள் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே கிடைப்பதாக பேராசிரியை சிறிமா கிரிபமுன குறிப்பிடுகின்றார். இதற்கு அக்காலப் பிரிவில் சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து முஸ்லிம்களும் தெற்கு நோக்கி நகர்ந்திருக்கலாம் என அவர் கருதுகின்றார். பொலன்னறுவையை சோழர்






AHARAM அகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக போராடிய முதலாம் விஜயபாகுவின் வாழ்க்கையை உன்னிப்பாக அவதானிக்கும்போது இக்கருத்தை நிறுவக்கூடிய சில சான்றுகளைக் காண முடிகின்றது. சூளவம்சம் விஜயபாகுவின் வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காது விட்டுள்ள போதிலும் அவனது சாதனைகளை அறிவதற்கும் அவனது வரலாற்றை உணர்வதற்கும் பெரும் துணையாக சூளவம்சமே அமைகின்றது.

கீர்த்தி என்ற இளமைப் பெயரைக் கொண்ட விஜயபாகு கி.பி. 1055 இல் உருகுணையில் இருந்த பிரதேச ஆட்சியாளர்கள் அனைவரையும் அடக்கி உருகுருணைக்கு அரசனானான். சோழர்களுக்கெதிரான தனது விடுதலைப் போராட்டம் வெற்றி அடைவதற்கு பொருளியல் வளம் அவசியம் என்பதை உணர்ந்தான். இதற்காக பர்மாவுடன் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்டான். இந்த வணிக உறவுக்கு ஒத்துழைப்பு நல்கியவர்களாக முஸ்லிம்களே இருந்திருப்பார்கள் எனக் கொள்வதற்கு அவனது வாழ்வு சான்றாக அமைகின்றது. 11 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கையின் கரையோர நகரங்களில் வணிக வளம் மிக்கவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். வங்காள விரிகுடாவின் வணிக வலிமை அவர்களிடத்திலே இருந்தது. எனவே, பர்மாவுடன் விஜயபாகு மேற்கொண்ட வணிக நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்கள் அடிப்படையாக இருந்திருப்பார்கள் எனக் கொள்ளலாம்.

கி.பி. 1070 இல் விஜயபாகு சோழர்களை வெற்றி கொண்டு இலங்கையை அவர்களது ஆதிக்கத்தில் இருந்து மீட்டெடுத்தான். பின் 1073 இல் அனுராதபுரத்தில் இலங்கையின் அரசனாக முடிசூடினான். விஜயபாகுவின் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை செய்வதற்காக இந்தியாவில் இருந்து பிராமணர்களை அழைத்து வந்து உதவியவர் பெரியதம்பி மரிக்கார் எனும் முஸ்லிம் வணிகராவார். இவர் தமது கப்பலில் இந்த பிராமணர்களை அழைத்து வந்து அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்று மன்னனின் முடிசூட்டு விழாவுக்கான ஒத்துழைப்பை நல்கினார். பின்னர் இவர்கள் தென் மாகாணத்தில் பலபிடி என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் குடியமர்த்தப்பட்ட பிரதேசம் இன்றும் 'பிராண்மணவத்த' என்றே அழைக்கப்படுகின்றது.



பொதுவாக, இலங்கையின் அரசியல் வரலாற்றை உற்று நோக்கும்போது அரசனின் முடிசூட்டு விழா மிக உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். தேவநம்பிய தீசனின் முடிசூட்டு விழா இந்தியாவின் அசோக சக்கரவர்த்தியின் ஒத்துழைப்போடும் அவர் அனுப்பிய மங்கலப் பொருட்களுடனும் நடைபெற்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இந்தப் பாரம்பரியம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொடர்வதை காணலாம். எனவே, இத்தகைய அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்யும் பொறுப்பு ஒரு முஸ்லிம் பிரபுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை மன்னனுக்கு அவர் மீதிருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் காட்டுகின்றது.


இந்த உறவு மிகச் சாதாரணமாக ஏற்பட்டிருக்க முடியாது. அதுவும் மிக நீண்டகாலம் தேசிய விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த விஜயபாகுவுக்கு மிக நெருக்கமாக இருப்பதென்பது எளிதான கருமமாக இருந்திருக்க முடியாது. மன்னனின் அதிவிசுவாசத்துக்கு உட்பட்டவராக பெரிய தம்பி மரிக்கார் இருந்திருக்க வேண்டும். அத்தோடு, அவனது விடுதலைப் போர் திட்டமிடப்பட்ட தென் மாகாணத்திலேயே அவர் வாழ்ந்திருக்க வேண்டும். இவை அனைத்தும் முஸ்லிம் சமூகம் அக்காலப் பிரிவில் பெற்றிருந்த உயர் அங்கீகாரத்துக்கு சான்றாக அமைகின்றன. விஜயபாகுவின் பொருளாதார வலிமைக்கு உரமூட்டிய முஸ்லிம்கள் அவனது விடுதலைப் போருக்கான நிதித் தேவையை நிறைவு செய்துள்ளார்கள். பின் அவன் மன்னனாக முடிசூட்டுவதற்கும் ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். இவை அனைத்தும் பொலன்னறுவைக் காலத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கு சான்றுகளாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மனசாட்சி



முத்துபண்டா வழியில் சென்று கொண்டிருக்கும் போது ஏராளமான முகங்கள் அவனை எட்டிப் பார்த்தன. அதிலேயும் சில பேர்,

''நீ என்ன முடிவு எடுத்திருக்காய்?'' என்று கேட்டார்கள். முத்துபண்டா எந்த உசுப்பாட்டமும் இல்லாமல் சிரித்தவாறு அவனது தலைமுடியை கோதிக் கொண்டு சென்றான்.

சில காலத்துக்கு முன் முத்துபண்டா காஸிம் முதலாளியின் ஒரு வேலைக்காரனாக வேலை செய்து கொண்டிருந்தான். அங்கு வேலை செய்த பணத்தில் சிறிதளவை குடும்பத்திற்கும் மற்றையதை அவன் சேர்த்தும் வைத்திருந்தான். சிறிது நாட்களுக்குப் பிறகு அவன் சேர்த்த பணத்திலிருந்து கொஞ்சத்தை எடுத்து பதினான்கு ஏக்கர் நிலத்தை வாங்கினான். பிறகு அவன் அந்த இடத்தை வயலாக மாற்றி அறுவடை செய்து வந்தான்.

திடீரென்று காஸிம் முதலாளி முத்துபண்டாவிடம் வந்து,

''உனக்கு ஏதாச்சும் வேலை உண்டோ?'' என்று கேட்டார். அதற்கு அவன்,

''என்ன முதலாளி இந்த கேள்வி?'' என்று கையைக் கட்டிக் கொண்டே கேட்டான்.

''முத்துபண்டா... அது வந்து...'' என்று அரைகுறையாகப் பேசத் தொடங்கினார்.

''என்ன முதலாளி இழுக்கிறீங்க?'' என்று சிரித்தபடி கேட்டான்.

''இல்ல முத்துபண்டா உனக்கே தெரியும். எங்க ஊரில முஸ்லிம்களுக்கென்று ஒரு பள்ளிவாசல் கிடையாது. ஐவேளை தொழுவதற்கு பக்கத்து ஊருக்குத்தான் போக வேண்டிய நிலம. அதனால நீ...?'' என்று இழுத்தடித்தார்.

''என்ன முதலாளி மீண்டும் விஷயத்த சொல்லாம நிறுத்திட்டீங்க...?'' என்று கேட்டான்.

திரும்பவும் முதலாளி சொற்களை மெல்ல மெல்ல வெளியேற்றினார்.

''அதற்கு முஸ்லிம்களுக்காக ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கு உனது இடத்தை எங்களுக்கு தர முடியுமா? அதற்கு உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?'' என்றார் காஸிம் முதலாளி.

''இல்ல முதலாளி... நீங்க திடுதிடுப்பின்னு கேட்டதால் எனக்கு ஒன்னும் சொல்ல முடியல...'' என்றான். காஸிம் முதலாளி சொன்னார்,

''நாம அந்த நிலத்துக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தாரோம். நீ முடிவெடுக்க எவ்வளவு நாள் வேணும் என்றாலும் தாராளமாக எடுத்துக்கொள்'' என்றார்.

அதற்கு முத்துபண்டா, ''இல்ல முதலாளி நான் மட்டும் முடிவெடுத்தா பத்தாது. அதற்கு என் மனைவியும் முடிவு சொல்லணும்'' என்றான்.

''பரவாயில்லை நீ போய் கலந்துரையாடி என்னிடம் வந்து ஒரு நல்ல முடிவா சொல்லு... அத உனக்கு அல்லாஹ்விடம் போய் நன்மையா முடியும்... நீ எதற்கும் நல்ல முடிவா சொல்.'' என்றார் காஸிம் முதலாளி. முத்துபண்டா கையை கூப்பி வணங்கியபடி தலையை ஆட்டி ''நான் போய் வாரேன் ஐயா!''

காஸிம் முதலாளி இப்படி முத்துபண்டாவிடம் நிலத்தை கேட்டது காட்டுத் தீ போல் ஊரெங்கும் பரவியது.

முத்துபண்டா வழியில் போகும்போது சிங்கள மக்கள் அவனிடம், ''நீ இந்த நிலத்தை முஸ்லிம் மக்களுக்கு கொடுத்தா உன்ன இந்த ஊரைவிட்டே துரத்திடுவோம்'' என்றார்கள். முத்துபண்டா வீட்டுக்குச் சென்று மனைவியின் கைகளை பற்றிப் பிடித்துக் கொண்டு நடந்தவற்றை சொன்னான். அதற்கு மனைவி,

''நீங்க என்ன முடிவு எடுத்திருக்கீங்க?'' என்றாள். அதற்கு முத்துபண்டா,

''ம்...'' என்று ஒரு பெருமூச்சை விட்டான். பிறகு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✍ ஏ.எப். ரிப்கா
கே/அல்-அகீல் மு.ம.வி.
கொட்டியாகும்புற

''நான் என்ன முடிவ எடுத்தாலும் அது ரெண்டு இனத்துக்கும் சாதகமாகத்தான் இருக்க வேண்டும்'' என்றான்.

முத்துபண்டா நடந்த எல்லா விடயத்தையும் நினைத்துக் கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். முத்துபண்டாவிற்கு காஸிம் முதலாளியை பகைத்துக் கொள்ளவும் முடியவில்லை. சிங்கள மக்களை பகைத்துக் கொள்ளவும் முடியவில்லை. வியர்வையை கையால் துடைத்தவாறே யோசித்துக் கொண்டு மதகுருவை பார்ப்பதற்குச் சென்றான்.

அவன் மதகுருவை கண்டதும் தலையை குனிந்து கைகளைக் கூப்பி வணங்கிக் கொண்டு நின்றான். அதற்கு மதகுரு ''இருக்கட்டும்'' என்றார்.

''நான் எல்லா விஷயத்தையும் கேள்விப்பட்டேன்'' என்றார்.

''மதகுருவே! நான் இப்ப என்ன செய்வது?'' என்றான்.

அதற்கு மதகுரு சொன்னார், ''மனிதனாய் பிறந்தவர்க்கு மனிதாபிமானமும் மனசாட்சியும்தான் முக்கியம். நீ காஸிம் முதலாளியிடம் போய் சொல்லு. நீ அந்த நிலத்தை பள்ளிவாசல் கட்டுவதற்கு தருகிறேன் என்று.''

அதற்கு அவன் தலையை ஆட்டிக் கொண்டே இடத்தை விட்டும் அகன்றான்.

முத்துபண்டா சிரித்தவாறு தன் தலைப்பாவை சுருட்டிக் கொண்டு வந்தான். வரும் வழியில் முகம்மத் அவர்கள் வந்து, ''உங்க முதலாளி காஸிமுக்கு நெஞ்சு வலியால் ஆஸ்பத்திரியில் எட்மிட் செய்துள்ளோம்'' என்று கூறினார்.

முத்துபண்டா பதறியடித்து ஆஸ்பத்திரிக்கு ஓடினான். ஆஸ்பத்திரியில் முத்துபண்டா உள்ளதை சிங்கள மக்கள் கண்டார்கள். முத்துபண்டா சொன்னான் ''மனிதனாய் பிறந்தவன் மனசாட்சி சொல்வதைத்தான் கேட்க வேண்டும். முதலில் தன் மனசாட்சி எதை செய்ய சொல்கிறதோ அது மட்டும் கேளுங்கள்'' என்றான்.

ஆஸ்பத்திரியில் இருந்து காஸிம் முதலாளியை டிஸ்சாஜ் செய்து விட்டார்கள். முத்து பண்டா காஸிம் முதலாளியை பார்ப்பதற்கு வீட்டிற்கு சென்றான். காஸிம் முதலாளி சொன்னார்,

''எனக்கு அந்த நிலம் வேண்டாம். நான் அதை கேட்டதால்தான் இவ்வளவு பிரச்சினையும்'' என்றார்.

''இல்ல முதலாளி... நான் அந்த நிலத்தை உங்களுக்கு பள்ளிவாசல் கட்டுவதற்காக தருகிறேன்'' என்றான். அதற்கு காஸிம் முதலாளி ''ரொம்ப நன்றி'' என்று கூறினார்.

பிறகு சிறிது காலத்தின் பின்னர் பள்ளிவாசல் கட்டப்பட்டது. ''எந்த ஒருவருக்கும் மனசாட்சி சொல்லும் தீர்ப்புதான் நன்மை'' என்று மனைவியிடம் கூறி சந்தோஷப்பட்டான் முத்துபண்டா.

## *சிந்தனைக் கதை*

*மூன்று தவளைகள் ஒரு மலையின் உச்சிக்கு ஏறுவதற்கு தயாராகின. அவை மலையேற ஆரம்பிக்கும்போது பார்வையாளராக இருந்த ஒருவர் 'இவ்வளவு உயரமான மலையில் ஏறும்போது வழியில் கற்கள் தடுக்கி விழுந்தால் அவ்வளவுதான்' என்றார்.*


*உடனே ஒரு தவளை மலை ஏறுவதை நிறுத்திவிட்டது. சிறிது தூரம் சென்றவுடன் இன்னொருவர், 'மேலே செல்லும்போது பாம்புகள் பிடித்துவிட்டால் என்ன செய்யப் போகின்றன?' என்றார். உடனே இரண்டாவது தவளையும் கீழிறங்கிவிட்டது. ஆனால், யார் என்ன சொன்னாலும் கேட்காத மூன்றாவது தவளை மட்டும் மலை உச்சியை சென்றடைந்தது.*

*பின்னர் கீழிறங்கிய அந்தத் தவளையிடம் அங்கிருந்த ஒருவர், 'இவர்கள் எல்லோரும் எதிர்மறையாக கூறியும் உன்னால் மட்டும் எப்படி துணிந்து சிகரத்தை அடைய முடிந்தது?' என்று கேட்டார். அதற்கு அந்தத் தவளை 'எனக்குக் காது கேட்காது' என்றது. நாமும் வாழ்வில் இந்த தவளையைப் போல இருந்தால்தான் சில நேரங்களில் முன்னேற முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் லத்தீப் அஷ்ரஃப் சாதாரண தரம் வரை பொத்துவில் அல்இர்பான் மஹா வித்தியாலயத்திலும் உயர் தரத்தை வர்த்தகப் பிரிவில் பொத்துவில் மத்திய கல்லூரியிலும் கற்றார். இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் உறுப்பினராக இருக்கும் இவர், தேசிய சர்வதேச போட்டிகளில் பல பதக்கங்களை சுவீகரித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கத்தையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்று, தாய் நாட்டுக்கு கௌரவத்தை தேடிக் கொடுத்தார். தங்கம் வென்ற அஷ்ரஃபுடன் அகரத்தின் நேர்காணல்...



**நேர்காணல்: ஐ.எம். இர்சாத்**
**படம்: உஸ்மான் அகீல்**

# "இலங்கை முஸ்லிம் மாணவர்களாலும் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல முடியும்"

## தென்னாசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற பொத்துவில் அஷ்ரஃப்

**அகரம்:** உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறுங்கள்?

**அஷ்ரஃப்:** எனது பெயர் அப்துல் லதீப் அஷ்ரஃப். எனது குடும்பம் ஏழு பேரைக் கொண்ட ஓர் அழகிய குடும்பமாகும். தாய், தந்தை, சகோதரன் உட்பட மூன்று சகோதரிகள் உள்ளனர். நான் க.பொ.த. சாதாரண தர பரீட்சை வரை பொத்துவில் அல்இர்பான் கல்லூரியிலும், உயர் தரத்தை பொத்துவில் மத்திய கல்லூரியிலும் வணிகத் துறையில் கற்றேன்.

**அகரம்:** உங்களது விளையாட்டு ஆர்வத்தை நீங்களாகவே இனங்கண்டு கொண்டீர்களா?

**அஷ்ரஃப்:** பொத்துவில் பிரதேசத்தை பொறுத்தவரையில் இதுவரை ஒரு பொது விளையாட்டு மைதானம் ஒன்றுகூட இல்லை. ஆகையால், நான் வழமையாக மாலை நேரங்களில் விளையாடுவதற்காக பாடசாலை மைதானத்திற்கு செல்வேன். எனக்கு ஆரம்ப காலங்களில் மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் ஆர்வம் காணப்படவில்லை. கிரிக்கெட்தான் நான் மிகவும் ஆர்வம் கொண்டு விளையாடுவேன்.

என்னோடு பாடசாலை மைதானத்தில் விளையாடிய ஒருவர்தான் ஜெலீல் என்பவர். அவர் என்னிடம் கிரிக்கெட் ஆடும் திறமையைவிட மெய்வல்லுநர் போட்டிகளுக்கான திறன்கள் அதிகம் காணப்படுவதாக என் திறமையை எனக்கு இனங்காட்டித் தந்தார். அது மாத்திரமன்றி, விளையாட்டுக்கு தேவையான ஆடை, பாதணி போன்றவற்றையும் தந்துதவி என்னை மேலும் ஊக்குவித்தார். பிறகு நான் பாடசாலை மட்டங்களில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றேன். 2011 இல் முதன் முறையாக சர்வதேச இளைஞர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற வாய்ப்பும் கிடைத்தது. சகோதரர் ஜெலீலின் ஊக்குவிப்போடு ஸிஹான் எம்பிலிபிடிய போன்ற வீரர்கள் எனது விளையாட்டு ரசிகர்களாக மாறியமையும் நான் இத்துறையில் மேம்பட இன்னுமொரு காரணமாகவும் அமைந்தது.

**அகரம்:** தெற்காசிய விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு முன்னரான உ... எது சாதனைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்... காள்ளுங்கள்?

**அஷ்ரஃப்:** 2011 ஆம் நடைபெற்ற இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற வாய்ப்புக் கிடைத்தது. 2012 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழாவில் கலந்து 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டேன். இது என்னை மேலும் ஊக்குவித்தது. 2013 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற லெஸபோனியா மெய்வல்லுநர் போட்டியில் 100 x 4 அஞ்சல் போட்டியில் பங்குபற்றி தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டேன். இதுதான் எனது முதல் பதக்கமாகும். அதுவும் அது தங்கப் பதக்கம் என்பதால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. 2014 ஆம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற ஒரு போட்டியில் பங்குபற்றக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று, 2015 Asian Championship போட்டியில் பங்குபற்றி நான்காம் இடம்தான் பெற முடிந்தது. இறுதியாக 2016 ஆம் ஆண்டு தற்போது நடந்து முடிந்த போட்டியில் 100 x 4 அஞ்சலோட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் 100 மீற்றர் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரிக்க முடிந்தமையிட்டு அளவிலா மகிழ்ச்சி அடைவதோடு அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்பதையும் உணர்கின்றேன்.

**அகரம்**: தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் நீங்கள் பெற்ற புதிய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**அஷ்ரஃப்**: தாயகத்திற்கு அப்பால் பலமுறை சென்று போட்டியிட்ட சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் எனது முதல் அனுபவமான கொரியா சென்று போட்டியிட்ட சந்தர்ப்பம் கூடிய அனுபவங்களை தந்தது எனலாம். அதாவது, பிற நாட்டு மக்களின் கலாசாரம், நடத்தை பன்முகத்தன்மை போன்ற விடயங்களையும் என்னோடு போட்டியிட்ட சக போட்டியாளர்களின் மனோநிலை அவர்களது ஆர்வம் வெற்றி தோல்வியை ஏற்கும் மனப்பாங்கு போன்ற விடயங்களை எனக்கு இனங்காண முடிந்தது.

**அகரம்**: விளையாட்டுத் துறையில் ஈடுபடும் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றி கூற முடியுமா?

**அஷ்ரஃப்**: மனிதனாக பிறந்த அனைவரிடத்திலும் ஒழுக்கம் இன்றியமையாத விடயமாகும். குறிப்பாக, பல்லின மக்களுக்கு மத்தியில் வாழும் எம்மிடத்தில் இந்த ஒழுக்கமும் சகவாழ்வும் இன்றியமையாததாகும். விளையாட்டு என்று வருகின்றபோது ஒழுக்கம் பல இடங்களில் பிரதிபலிக்கின்றன. அதேபோன்று, நாம் பல இன வீரர்களோடு போட்டியிட வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. அச்சந்தர்ப்பத்தில் நாம் ஒரு போதும் இஸ்லாமியன் என்ற விடயத்தை மறவலாகாது. மேலும், என்னோடு தோழமை கொண்டுள்ள எம் நாட்டு ஏனைய மூன்று வீரர்களும் பிற மதத்தைச் சார்ந்தவர்கள். எனினும், நான் அவர்களுடன் நட்புறவோடு செயற்படுகின்றேன். அந்த நட்புறவும் ஒற்றுமையுமே எனக்கு தங்கப் பதக்கத்தை பெற வழிவகுத்தது எனலாம்.

**அகரம்**: நீங்கள் விளையாட்டுத் துறையில் எதிர்நோக்கிய சிரமங்கள் பற்றி?

**அஷ்ரஃப்**: உண்மையில் விளையாட்டுத் துறையில் கால்பதித்த நான் பல சிரமங்களுக்கு மத்தியில்தான் இந்த வெற்றிகளை எய்திக் கொண்டேன். என்னைப் போன்று பலர் சமூகத்தில் இலைமறை காயாக காணப்படலாம். அவர்களின் திறன்கள் சமூக மட்டத்தில் நாடளாவிய ரீதியில் வெளிக்கொணரப்பட வேண்டும். அவ்வாறு மறைந்திருக்கும் வீரர்களை இனங்கண்டு என்னை விட சாதனை படைக்கும் வீரர்களாக மாற்ற வேண்டும் என்றும் ஒரு பொது மைதானமே இல்லாத எனது ஊருக்கு ஒரு பொது மைதானத்தை பெற்றுக் கொடுப்பதோடு ஊருக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பிரயோசனப்படக் கூடிய ஒரு பிரஜையாக மாற்ற வேண்டும் எனவும் விரும்புகிறேன்.

**அகரம்**: இளைஞர் சமூகத்திற்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**அஷ்ரஃப்**: எம் நாட்டு இளைஞர் சமூகத்திற்கு நான் கூற விரும்புவது என்னவென்றால், இலக்கை நோக்கி பயணிக்கும் எம்மிடத்தில் தன்னம்பிக்கையும் தியாக உணர்வும் காணப்படல் வேண்டும். என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கைதான் என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்துள்ளது. இத்தோடு, ஒழுக்கம் என்ற விடயத்தோடு பெற்றோரை, ஆசிரியர்களை மதித்து கண்ணியப்படுத்தல் வேண்டும். இவ்வாறான நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தால் நாளைய எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை, இன்ஷா அல்லாஹ்.

**அகரம்**: நீங்கள் இந்த சந்தர்ப்பத்தில் எவருக்கெல்லாம் நன்றி கூற விரும்புகிறீர்கள்?

**அஷ்ரஃப்**: இந்த வெற்றியைத் தந்த அல்லாஹ்வுக்கு முதலில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, என்றும் என்னை அன்போடு அரவணைத்த பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் நன்றி கூறுவதோடு எனது பாடசாலை ஆசான்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு, முன்னைய பயிற்றுவிப்பாளர் ஆனந்தா சேர் அவர்களுக்கும் தற்போதைய பயிற்றுவிப்பாளர் சுனில் சேர் அவர்களுக்கும் என்னையே எனக்கு அறிமுகம் செய்த சகோதரர் ஜெலீல் அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளதோடு, தெற்காசிய போட்டியில் பங்குபற்றி நாடு திரும்பியதும் அன்பளிப்புக்கள் தந்துதவிய முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் பிரதி விளையட்டுத் துறை அமைச்சர் ஹரிஸ் அவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு குறிப்பாக, எனது பொத்துவில் சொந்தங்களுக்கும் நான் எனது மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அகரம்**: உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

**அஷ்ரஃப்**: தற்போது இலங்கையின் இராணுவத்தின் விளையாட்டு அமைப்பில் பணிபுரியும் நான் எதிர்காலத்தில் இலங்கையின் ஒரு சிறந்த விளையாட்டுத்துறை அதிகாரியாக வர ஆசைப்படுவதோடு எதிர்வரும் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுவதும் எனது ஓர் இலட்சியமாக உள்ளது. ஆகவே, அதற்கான முன்னெடுப்புக்களையும் தற்போது செய்து வருகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு மற்றும் சரீர ஆரோக்கிய மேம்படுத்தல் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

- விளையாட்டு மற்றும் சரீர ஆரோக்கியம், பிரபல்ய மிக்க விளையாட்டுத் துறையில் திறமையுள்ள மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களை வெளிக் கொண்டு வருதல், ஆரோக்கியமான வாழ்க்கை, வீர விளையாட்டில் ஈடுபடுதல் மற்றும் விளையாட்டு எனும் தலைப்பை மென்மேலும் வலுப்படுத்தி சிறந்த அர்த்தத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2016 ஜனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இது விளையாட்டுத்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

# 2015 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு

- 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 15,421,202 பேர் ஆகும்.
- நாட்டின் அதிக வேட்பாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் (1,681,887 பேர்) உள்ளனர். குறைந்த வேட்பாளர்கள் வன்னி தேர்தல் மாவட்டத்திலேயே (263, 201 பேர்) உள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆண்டு நிறைவு

Sri Lanka Telecom
One Country. One Voice.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் கடலுக்கடியிலான கேபிள்கள் மூலம், விரைவான இணையத்தள சேவைகளை வழங்கும் நிகழ்வும் ரெலிகொம் நிறுவனத்தின் 150 ஆண்டு விழாவும் 2016 பெப்ரவரியில் நடைபெற்றது.


உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக எமது நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னேற்றுவதே அரசின் கொள்கையாகும்.

அரசின் புதிய கொள்கைகளை நிறைவேற்றுதல், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி என்பவற்றை முதன்மைப்படுத்தியே டிஜிட்டல் அமைச்சு ஏற்படுத்தப் பட்டுள்ளது.




திரு. பீ. உமா சங்கர்
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

# இலங்கையின் மிகப் பெரிய தானியக் களஞ்சியம்



- மொனராகல புத்தல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கைத்தொழில் குடியேற்றத்தில் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள நாட்டிலேயே மிகப் பெரிய தானியக் களஞ்சிய சாலை கட்டடத் தொகுதி 2016 ஜனவரியில் திறந்து வைக்கப்பட்டது.
- இந்நாட்டு விவசாய மக்களின் பொருளாதார பாதுகாப்பை வலுப்படுத்தல், மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கான பாதுகாப்பு சூற்றாடலை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காகவே இக்களஞ்சியசாலை உருவாக்கப்பட்டது.
- இக்களஞ்சியசாலையை நிர்மாணிக்கவென உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் அரசாங்கத்தின் 260 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகா வைரஸ்




- 1947 ஆம் ஆண்டு உகண்டாவில் குரங்கொன்றில் முதன் முதலாக சிகா வைரஸ் அடையாளம் காணப்பட்டது.
- 2015 மேயில் தென் ஆபிரிக்காவில் பிரேசிலில் மேற்படி வைரஸ் தாக்கம் அடையாளம் காணப்பட்டதுடன், தற்போது அது மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.
- நுளம்புகளால் பரவும் இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் பலருக்கு நோய் அறிகுறி தென்படாத போதிலும் குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறப்பதற்கு இந்த வைரஸ் காரணமாகின்றது.
- உலக சுகாதார ஸ்தாபன அறிக்கையின் பிரகாரம் பிரேசிலில் 500 000க்கும் 1.5 மில்லியனுக்கும் இடைப்பட்டோர் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளானதுடன், இப்பிராந்தியத்தில் 20 க்கு மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது.

## மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனின் இலங்கை விஜயம்



கடந்த பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இலங்கைக்கு அவர் மேற்கொண்ட விஜயம் தொடர்பில் பேரவைக்கு விளக்கம் அளிக்கவுள்ளார். மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 31 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக விவாதம் நடத்துவதற்கு எந்தவொரு தினமும் இதுவரை நிகழ்ச்சி நிரல் அட்டவணையில் ஒதுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## உலகில் கணைய மாற்று சிகிச்சை

- 2016 ஜனவரியில் உலகின் கணைய மாற்று சிகிச்சைக்கு உட்பட்ட முதலாவது நபர் என்ற பெயரை பிரித்தானியாவின் ஸு யோர்க் பெறுகின்றார்.
- இவர் நீரிழிவு மற்றும் நீபில் போபியா நோய்ப் பாதிப்புக்கு உள்ளாகி இருந்ததுடன் இச்சிச்சை மன்செஸ்டர் ரோயல் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டகெஹிகோ நகாஓவின் வருகை



- இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த ஆண்டுகளில் வழங்கிய உதவிகளையும் விட அதிகமான உதவிகளை எதிர்வரும் மூன்றாண்டுகளில் இலங்கைக்கு வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டகெஹிகோ நகாஓ தெரிவிக்கின்றார்.
- இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து, இலங்கையில் கல்வி மற்றும் நீர்ப்பாசன துறைகளின் அபிவிருத்திக்காக விசேட உதவிகளை வழங்க எதிர்பார்ப்பதாக டகேஹிகோ நகாஓ ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கூறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## உலகில் வாழ்வதற்கு சிறந்த இடம் வியன்னா

உலகில் வாழ்வதற்கு சிறந்த இடங்கள் பற்றி மெரஜர நிறுவனம் வெளியிட்ட பட்டியலில் ஒஸ்திரியா தலைநகர் வியன்னா முதலிடம் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூஸிலாந்து நட்டின் பிரதமர் ஜோன் கீயின் வருகை

நியூஸிலாந்து நாட்டின் பிரதமர் ஜோன் கீ பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தார். சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவரை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி ஆரம்பம்




பங்களாதேஷில் புதுப் பொலிவுடன் ஆரம்பமாகியுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின. இலங்கை அணி தனது முதலாவது போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொண்டது. இதுவரை காலமும் 50 ஓவர் போட்டித் தொடராக நடைபெற்ற ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரானது இம்முறை 20 ஓவர் தொடராக நடைபெறுவது அனைத்து தரப்பிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த தொடருக்கு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் நேரடியாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தகுதிச் சுற்று போட்டிகள் அடிப்படையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தொடரின் ஐந்தாவது அணியாக தெரிவாகியுள்ளது. 1984 ஆம் ஆண்டு ஆரம்பித்து இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் ஐந்து தடவை இந்தியாவும் ஐந்து தடவை இலங்கையும் இரு தடவை பாகிஸ்தானும் சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளன. எனினும், 2014 ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற தொடரில் இலங்கை சம்பியன் கிண்ணத்தை வென்றது. எனவே, இந்த வருடமும் தான் பெற்ற சம்பியன் கிண்ணத்தை இலங்கை தக்கவைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 29 ஆவது சட்டமா அதிபராக ஜயந்த ஜயசூரிய நியமனம்

புதிய சட்டமா அதிபராக ஜெனரல் ஜயந்த ஜயசூரிய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கியிருந்தது. இலங்கையின் 28 ஆவது சட்டமா அதிபராக செயற்பட்டிருந்த யுவன் ரஞ்சன வணசுந்தர விஜய திலக்கவின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகிதியுடன் நிறைவு பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து சட்டமா அதிபர் பதவிக்கு வெற்றிடம் நிலவியிருந்த நிலையில் பதில் சட்டமா அதிபராக சுஹத கம்லத் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சட்டமா அதிபர் பதவிக்கு ஜனாதிபதியினால் மூன்று பேர் பரிந்துரை செய்யப்பட்டருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நடைமுறைக் கல்வி, வழிகாட்டல் மற்றும் கல்வியின் பிரதிபலன் எனும் தொனிப்பொருளில் பெப்ரவரி 21 உலக தாய் மொழி தினம் கொண்டாடப்பட்டது

அனைத்து மொழிகளினதும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பதை நோக்காக கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் 2007 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய அன்றைய நாள் உலக தாய் மொழித் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் வங்காள மொழியை அரச மொழியாக பிரகடனப்படுத்தக் கோரி 1952 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து தாய்மொழித் தினம் கொண்டாடப்படுகின்றது.

உலகில் தற்போது 7000 இற்கும் அதிகமான மொழிகள் பயன்படுத்தப்படுவதாகவும் அவற்றில் 50 வீதமான மொழிகள் அழிந்து செல்லும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலத்தின் மாற்றதிற்கு அமைய தாய் மொழி மாற்றம் அடைய வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜே.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக் கதை

அமெரிக்காவின் ஒரு பிரபல மாதப் பத்திரிகைதான் லேடீஸ் ஹோம் ஜர்னல். இதன் ஆசிரியராக 26 வயதுடைய எட்வட் போர்க் நியமிக்கப்பட்டார். அவர் ஆசிரியராக வந்ததுதான் தாமதம் பத்திரிகை ஆஹா... ஓஹோ... என்று விற்கத் தொடங்கிவிட்டது. விற்பனை பன்மடங்கு அதிகரித்தது.

அமெரிக்காவின் முக்கிய பிரமுகர்கள் பற்றிய சுவையான விடயங்களைச் சுடச் சுடத் தருவதுதான் அவரது பத்திரிகையின் விற்பனைக்குக் காரணமாக இருந்தது. எவ்வாறு இந்த விபரங்களைத் திரட்டிக் கொள்கிறார் என்பது வேறு பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் புதிராக இருந்தது. விபரங்கள் பிழையாகி விட்டாலோ அது வழக்கு வம்புகளில் முடியவும் கூடுமல்லவா? ஆனால், அப்படி ஏதும் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை.

அவர் என்ன செய்தார் தெரியுமா? முதலில் ஒரு நபர் பற்றிக் கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் குறிப்பெடுத்துக் கொள்வார். பின்னர் அவற்றை உள்ளடக்கிய ஒரு கேள்விக் கொத்தைத் தயாரிப்பார். அதனை குறிப்பிட்ட பிரமுகருக்கு அனுப்பி வைப்பார். உங்கள் வாழ்க்கையில் இப்படி நடந்ததாமே? அப்படி நடந்ததாமே? உண்மைதானா? பதில் தெரிவியுங்கள் என்று அந்தக் கேள்விக் கொத்து அமையும். பிரமுகர்களும் அதற்கான விளக்கங்களைத் தருவார்கள். பிறகென்ன எந்தவித தயக்கமுமின்றி பத்திரிகையில் பிரசுரித்து விடுவார் எட்வர்ட் போக்.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 08

### தலைப்பு : தேயிலைத் தோட்டம்

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 மார்ச் 20**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு இறுவட்டுக்கள் (DVD) வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09

## தரமிருந்தும் இடம்பிடிக்க தவறியவை

எம்.ஆர். சல்வா
புத்தளம்

பாத்திமா இபாமா
பெலந்த ம.வி
பெலந்த

பாத்திமா நிம்னாஸ் பவாத்
அல் முஃமினாத் பெ.அ.க
அக்குரணை

எம்.பாத்திமா சதிலா
மூதூர் ம.க
மூதூர்.

எம். ஸிஹான்
மூதூர்

எம்.எம். நதா
புத்தளம்

ஆயிஷா ஸல்மா
அல் முஃமினாத் பெ.அ.க
அக்குரணை

எம்.ஐ. ஹம்தா
அல் ஹிக்மா ம.வி
குபுக்கன்தென

எம்.என்.எப். ருஸைக்கா
கா/முஸ்லிம் மகளிர் கல்லூரி
காலி

அப்ரா றிகாஸா
மகளிர் அரபுக் கல்லூரி
கல்எளிய

பாத்திமா ரஸீனா
ஆமினா தே.க.
மாத்தளை

இமானா
மூதூர்

நஸ்ருல்லாஹ்
அமீனியா ஆரம்ப பாடசாலை

ஷரபா சலீம்
ரஜவெல

எம்.ஆர்.எப். சாஜிதா
ரஜவெல

அஸ்ரா யஃகூப்
தம்புள்ளை
கலேவல

எம்.எம்.எப். ருஸ்தி
கல்லஞ்சியாகம அரபா மு.வி
காகம.

ஆர்.எம். ரிப்தி
ஹெட்டிபொல ஆ.பா.
ஹெட்டிபொல

என். நப்லா
நாச்சிக்குடா

எஸ். சபூரா பானு
அல் அக்ஸா தே.பா.
கற்பிட்டி

எம்.ஐ.எப். நுஸ்லா
அம்பலன்வத்த

எம்.ஜே.எம். கைஸ்
கஹவத்த மு.வி
கஹவத்த

எம்.எப்.எப். அக்ஸா
எருகலம்பிட்டி மகளிர் ம.வி

ஏ.எப். அப்லா
எருகலம்பிட்டி மகளிர் ம.வி

ஜெவ்ஹர்கான்
பேராறு கந்தளாய்

ஏ.கே.எப். அகீஸா
கலாவெவ மு.ம.க
கலாவெவ.

ஆதிலா தாஹா
அல் முஃமினாத் ம.அ.க
அக்குரனை.

ஏப். பஹ்மிதா
தெல்தோட்டை.

ஆயிஸா ஹஸன்
அல் முஃமினாத் அ.க
அக்குரனை.

ஏப். ஜுமானா
எருக்கலம்பிட்டி மகளிர் ம.வி
மன்னார்.


எஸ். சல்மியா
எருக்கலம்பிட்டி மகளிர் ம.வி
மன்னார்.

நுஸ்கா ஜவாஹிர்
அல் முஃமினாத் அ.க
அக்குரனை.

ஜே. ஜெனூபா
சுமையா மகளிர் அ.க.
கிண்ணியா - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11

தொடர் : 06

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
மினுவாங்கொட, கம்பஹா வலயம்.
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்


## கணினி ஆய்வுகூடத்தை பயன்படுத்தும் முறை — பாடம் 01

மாணவர்களாகிய நாம் பாடசாலையில் கணினி ஆய்வுகூடத்தை (Computer Lab) பயன்படுத்த மிகவும் ஆசை கொள்வோம். கணினி ஆய்வுகூடத்திற்கு செல்வதற்கான ஒரு மேலதிக பாடவேளை எமக்குக் கிடைக்குமென்றால் வெகு ஆர்வத்துடன் அதற்குள் நுழைகின்றோம்.



இவ்வாறு நீங்கள் நுழைவதற்குக் காரணம் கணினி பற்றி நீங்கள் கொண்டுள்ள பற்றும் விருப்பமும் ஆகும். உண்மையில் பாடத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள் அவ்வாறுதான் செயற்பட வேண்டும். எனினும், கணினி ஆய்வுகூடத்திற்கு செல்வதற்கான சில ஒழுங்குகளையும் அதனை பயன்படுத்துவதற்கான சில விதிமுறைகளையும் நாம் தெரிந்து வைத்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

**கணினி ஆய்வு கூடத்திற்குள் நுழையும் முன்...**




01. கைகளை சுத்தமாக வைத்திருங்கள்.
02. உணவு, குடிபானங்களைக் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
03. உங்கள் பாதணிகளை ஒழுங்கு வரிசையாக அடுக்கி வைத்துவிட்டு அல்லது கணினி ஆய்வறைக்கருகே அமைக்கப்பட்டுள்ள தட்டில் (Shoe Rack) ஒழுங்காக வைத்துவிட்டு நுழையுங்கள்.

**நுழைய வேண்டாம்**

04. கணினி ஆய்வுகூடத்தில் பாட ஆசிரியர் இல்லை எனில், நுழைய வேண்டாம்.
05. நீங்கள் பாடத்திற்கு தாமதமாகி வந்தால் அனுமதியின்றி அறையில் நுழைய வேண்டாம்.

**ஆய்வு கூடத்தில் உங்கள் ஒழுக்கம்**



06. ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்கு ஓடித்திரிவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
07. ஒரு கதிரையிலிருந்து மறு கதிரைக்கோ, ஒரு மேசையிலிருந்து மறு மேசைக்கோ இடம் மாறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
08. உங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அமருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. வகுப்பிலிருக்கும் நண்பருக்கு நீங்கள் இடம் ஒதுக்கி அடுத்த நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.


10. உங்களது இருக்கையிலிருந்து நகர்வதாயின் ஆசிரியரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

11. உங்கள் குரலை மைதானத்தில் போன்றல்லாமல் வகுப்பறையின் அளவுக்கு மிதப்படுத்திக் கொள்ளுங்கள்.

12. ஏனைய நண்பர்களுக்கு உதவுங்கள். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்லிக் கொடுங்கள்; செய்து கொடுக்காதீர்கள்.

13. கணினி அறையில் நல்ல பண்பாடுகளுடன் நடந்து கொள்ளுங்கள்.

**அறிந்து கொள்ளுங்கள்**



14. தீப்பற்றிக் கொண்டால் வெளியேறுமிடம் மற்றும் First Aid Box இருக்கும் இடத்தை அவசர தேவை கருதி அறிந்திடுங்கள்.

15. கணினியில் ஏதாவது பழுதிருந்தால் அல்லது Plug களில் பிரச்சினைகள் இருந்தால் உடனடியாக உங்கள் ஆசிரியருக்கு அறிவிக்கவும்.

16. கணினியோடு பொருத்தப்பட்டிருக்கும் Cables களை மிதிப்பதையும் அவற்றினைக் கடந்து செல்வதையும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

17. Clips, Chips, Needls போன்ற உலோக பொருட்களை கணினி Casing ஊடாக போட வேண்டாம். ஏனெனில், அவை நெருப்பு ஏற்படுவதற்கு ஏதுவாகும் காரணிகளாகும்.

18. கணினி அறையிலிருந்து எதனையும் ஆசிரியரின் அனுமதியின்றி வெளியே கொண்டு செல்ல எத்தனிக்காதீர்கள். அடுத்த நண்பர்கள் அவ்வாறு செய்ய எத்தனித்தாலும் தடுத்து விடுங்கள்.

19. கணினியோடு பொருத்தப்பட்டுள்ள Cable களை ஆசிரியரின் அனுமதியின்றி பொருத்துவதையோ, நீக்குவதையோ பழக்கப்படுத்தாதீர்கள். அது உங்களைப் பற்றிய நன்மதிப்பை அழித்துவிடும்.

20. வெளியிலிருந்து கொண்டு வரும் உபகரணங்களை ஆசிரியரின் அனுமதியின்றி கணினியில் பொருத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், கணினி வைரஸ்கள் அனைத்து தகவல்களையும் அழிப்பதற்கு அது காரணமாக அமையலாம்.

21. உபகரணங்களை பழுதுபார்க்க முயற்சிக்காதீர்கள்.

22. நீங்களாகவே ஆசிரியரின் அனுமதியின்றி கணினியின் Program களை இயக்காதீர்கள்.

23. அடுத்தவர்களின் Folder, File களை Open, Move, Delete, Rename செய்யாதீர்கள்.

24. எப்போதும் நீங்கள் பயன்படுத்துகின்ற File இன் Extra Copy ஒன்றை வேறாக வைத்திருக்க பழகிக் கொள்ளுங்கள்.

**பயிற்சி:**

01. ஆய்வுகூடத்தில் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

02. ஆய்வுகூடத்தில் எங்களுடன் வரும் நண்பருக்கு நாம் தெரியாத ஒன்றை சொல்லிக் கொடுக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைமை யாது?

03. கணினி தீப்பிடித்து எரிந்து விடுவதற்கு ஏதுவான பயனரின் பணிகள் இரண்டு தருக.

04. பின்வரும் சொற்களை பாடத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.

அ. First Aid Box

ஆ. Extra Copy

# கணினி – Computer

கணினி என்பது ஓர் இலத்திரனியல் சாதனமாகும். இது தரவுகளை உள்ளீடு செய்து செய்முறைக்கு உட்படுத்தி அதிலிருந்து பயனுள்ள தகவல்களைத் தருவதுடன் Program களை கட்டுப்படுத்துகின்ற, சேமிக்கின்ற செயற்பாடுகளைச் செய்யகூடிய சாதனமாகும்.

## கணினியின் பண்புகள் (Characteristics of Computer)

1. வேகம் (Speed)
2. திருத்தம் (Accuracy)
3. நம்பகத்தன்மை (Reliability)
4. சேமிக்கக்கூடிய தன்மை (Storage Capability)
5. உணர்வற்ற தன்மை (No feeling)
6. சிந்திக்கும் ஆற்றலற்ற தன்மை (No I.Q)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள்!

ஜே.எம். அஸீம் (நளீமி)

ஒரு கிராமத்தில் ஏழ்மையில் வாடிய ஒரு பெண் இருந்தாள். அவளது வறுமையைப் போக்க உதவியது அவள் வளர்த்த பசு மாத்திரமே. தினமும் அதில் பால் கறந்து அருகிலுள்ள நகருக்குப் போய் விற்றுப் பணம் சம்பாதித்து வந்தாள்.

எத்தனை நாளைக்குத்தான் இப்படியே கழிப்பது? நாமும் நகரில் உள்ளவர்கள்போல் நன்றாக வாழ வேண்டாமா! என்ற சிந்தனை எப்போதும் அவளை வாட்டவே செய்தது.

இப்படி வாழ்க்கை உருண்டோட, ஒருநாள் அவள் பால் குடத்தை தலையில் சுமந்தபடி சிந்தித்தவாறே நடை பயின்றாள் நகர் நோக்கி. ''நாம் கொண்டுபோகும் பால் விற்று முடிகிறதுதானே! நாம் ஏன் இரண்டு குடம் பால் கொண்டு சென்று விற்கக் கூடாது! ஆஹா நல்ல யோசனை. இரண்டு குடம், சிறிது நாளில் மூன்று குடமாகும். இன்னும் சில நாளில் நான்காக, ஐந்தாக மாறும். நமது கையில் பணம் மிதக்கும். நாம் நகரிலே வீடு வாங்கலாம். அப்போது இந்த மாட்டை என்ன பண்ணலாம்?'' அவளது கற்பனைக் குதிரை பறந்து கொண்டிருந்தது.

திடீரென ஒரு சத்தம்.

தலை ஈரமாவதை அவள் உணர சில நொடிகள் எடுத்தன. ஆம், மரக்கிளை ஒன்றில் சுமந்து வந்த பால் குடம் முட்டி பால் நிலத்திலே சிந்திக் கொண்டிருந்தது. பேராசை பெரு நஷ்டம்.

இப்படித்தான் முடியும் நாம் படித்த கதைகள்.

டிஸ்னி லேண்ட்டைக் கலக்குகின்றன எத்தனையோ மனிதர்களின் கற்பனைகள். ஹாலிவுட்டைக் கலங்கடிக்கின்றன எத்தனை எத்தனை எழுத்தாளர்கள், இயக்குநர்களின் கற்பனைகள். நாசாவை விண்தாண்டி பயணிக்க வைக்கின்றது அவர்களது கற்பனை. எடிசன் காலம் என்ன... எமர்சன் காலம் என்ன... மார்க் என்ன... ஜொப்ஸ் என்ன... அவர்களது கற்பனைகள் முழு உலகும் கற்பனை உலகு என்று கருதியவற்றை நிஜமாக்கித் தந்திருக்கின்றன.

உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள் என்கிறார்கள் மேலை நாட்டவர்கள. தேவையில்லாத விடயங்களை கற்பனை செய்து காலத்தை விரயமாக்கி விடாதே என்ற பாடம்தான் இன்று இங்கு பல வீடுகளிலும் பாடசாலைகளிலும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

நான் பறவையானால்... நான் யானையானால்... நான் தொலைபேசியானால்... என்ற கற்பனைக்கான விதைகள் பாடசாலைகளில் நடப்படுகின்றனதான். ஆனால், அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியும் எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

கடுமையான உழைப்பு, தொடர் முயற்சி, அயராத அர்ப்பணிப்பு, தோல்விகளை தகர்த்தெறிந்தமை என்பவைதான் எடிசனை, மார்க்கோனியை, சார்ள்ஸ் பப்பேஜ்ஜை உலகிற்கு உருவாக்கித் தந்தது என்பதற்கப்பால் அவர்களது கற்பனைக் குதிரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்த வேகமும் தூரமும்தான் இவற்றுக்கெல்லாம் அடிப்படையானது என்ற உண்மை எத்தனை இடங்களில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

எத்தனை நாளைக்குத்தான் இப்படி கும்மிருட்டில் தட்டுத் தடுமாறுவது? பகலைப்போல் இரவையும் வெளிச்சமாக்க வேண்டும் என்று எடிசன் அன்று சொன்னபோது உலகம் சிரித்தது.

நாம் பேசுவது எமக்கு எதிரொலியாக திருப்பிக் கேட்கிறதுதானே! அது கனதூரம் பயணிக்கின்றதுதானே! அப்படியென்றால் நாம் பேசுவதை கண்காணாத ஒருவரை சென்றடைய வைக்க முடியாதா என்று மார்க்கோனி கற்பனை செய்தபோது உலகம் எள்ளி நகையாடியது.

கைக்குள் உலகத்தை சுருக்கித் தருவேன் என்றும் விண்தாண்டி நொடிப்பொழுதில் அழைத்துச் செல்வேன் என்றும் மனிதர்கள் சொன்னபோது உலகம் அவர்களை அப்படித்தான் பார்த்தது. இன்று அனைத்தையும் உலகம் அனுபவிக்கத்தானே செய்கிறது.

உலகம் அனுபவிக்கும் இந்த மகத்தான வாழ்க்கைக்கு அப்பால் எத்தனையோ மனிதர்களின் கற்பனை இருக்கிறது.

சரி, உங்கள் கற்பனைக்குப் பூட்டுப் போட்டு விடாதீர்கள் என்பதை இப்பொழுது புரிந்திருப்பீர்கள். இனி, கற்பனை பற்றிய சில யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

தன்னால் கற்பனை செய்ய முடிந்ததை நிஜமாக்கிக் காட்டும் ஆற்றல் மனிதனுக்கு உள்ளது.

உ+ம்: பறவையைப்போல் பறக்க வேண்டும் என்ற கற்பனை விமானமாக வடிவமைக்கப்பட்டது.

கற்பனை வளத்திற்கு எல்லை இல்லை. ஆனால், அதை நாம் பயன்படுத்தும் அளவுக்கு எல்லை உண்டு. எந்தளவுக்கு அதனை வளர்த்துப் பயன்படுத்துகிறோமோ அந்தளவுக்கு அது பலன் கொடுக்கும்.

ஆரம்பத்தில் சொன்ன கதை முடியும் வசனம் பேராசை பெரு நஷ்டம். அந்த ஆசை என்பது ஒரு நினைப்பு. அது தெளிவற்றது. அதை நிஜமாக்கிக் காட்டினாலே ஒழிய அதற்கு எந்த மதிப்பும் இல்லை. மின்னலாய்த் தோன்றும் அந்த ஆசையை சாதனையாக்க இன்னும் பல விடயங்கள் தேவை.

இந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு களத்தில் இறங்கும்போது நமக்குள் செயல்துடிப்பு பிறக்கும். அந்த செயல்துடிப்பு இறுதி வரை நின்று நிலைக்கின்றபோது கற்பனை நிஜமாகும்.

கல்லூரியில் படிக்கும்போது அந்த கல்வி முறையையே மாற்ற வேண்டும் என கனவு கண்டார் டாக்டர் கன்சுலஸ். அந்தக் கல்லூரியின் தலைமைப் பொறுப்பு கிடைத்தால் தான் என்னென்ன செய்வேன் என்றெல்லாம் தனது கற்பனைக் குதிரையை தட்டிவிட்டிருந்தார். இந்தக் கல்வி முறையை மூட்டை கட்டிவிட்டு நவீன கல்விமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை எப்போதும் அவரை வாட்டிக் கொண்டே இருந்தது.

சற்றுக் கற்பனை பண்ணியபோது பத்து இலட்சம் டொலர் அதற்குத் தேவை என்று மனக்கணக்கு சொன்னது. சாதாரண மதபோதகரான அவரிடம் எங்கே அவ்வளவு பணம். இந்த நினைப்பு அவரது கற்பனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. எப்படியாவது பணம் திரட்ட வேண்டும்; இதனை செய்து காட்ட வேண்டும் என்ற நினைப்பே மிகைத்திருந்தது. ஒரு நாள்... இரண்டு நாள் அல்ல; இரண்டு வருடங்கள் இதே நினைப்புத்தான். இறுதியாக முடிவெடுத்தார்; இன்னும் பத்து நாட்களில் பணம் திரட்டுவேன்.

அறையில் இருந்து யோசித்தார். அங்குமிங்கும் அலைந்து யோசித்தார். ஒன்றும் சரிவரவில்லை. சில நாட்களின் பின்னர் ஒரு யோசனை வரவே பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்.

என்னிடம் பத்து இலட்சம் டொலர் இருந்தால் என்ன செய்வேன்? விசேட சொற்பொழிவு...

எதிர்பார்த்த நாளும் வந்தது. கூட்டமும் நிறைந்தது. மேடையில் ஏறினார். தான் தயாரித்து வைத்திருந்த உரையைப் பார்க்காமலேயே அவர் உள்ளத்திலிருந்த இரண்டு வருட ஏக்கமும் அவையோரை அடைந்தது.

உரை முடிந்ததும், இறுதி வரிசையில் அமர்ந்திருந்த ஒருவர் மறுநாள் தன்னை தனது அலுவலகத்தில் வந்து பார்க்கும்படி கூறினார். மறுநாள் வந்ததும் ''உங்கள் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் சொன்னதை செய்து காட்டுங்கள்'' என்று 10 இலட்சம் டொலர்களை கொடுத்தனுப்பினார். இன்று அந்தக் கல்லூரி தலைநிமிர்ந்து நிற்கிறது. இல்லிநாய்ஸ் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னொலொஜிதான் அது.

உங்கள் பகல் கனவை நாம் இங்கு கற்பனை வளம் என்று சொல்லவில்லை. உங்கள் இலட்சியங்களுக்குப் பின்னால், நிஜமான கனவுகளுக்குப் பின்னால் எப்படி கற்பனை வளம் சுற்றியிருக்க வேண்டும் என்பதையே உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். காலத்தை வீணாக்காதீர்கள். நீங்கள் நாளை, நாளை மறுதினம், நான்கு வருடங்களில், பதினான்கு வருடங்களில் எப்படி எப்படி இருப்பீர்கள் என்றெல்லாம் கற்பனை பண்ணுங்கள். அதனை நிஜமாக்க உழையுங்கள். உங்கள் கற்பனை பயனுள்ளதாக, அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். எங்கே உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விரைவு - உயர்வு - துணிவு**

எம்.ஏ. ரியாஸ் மொஹமட் (B.A, PGDE)
கு/இப்/அல் ஹூதா மு.ம.வி, ரிதீகம

# 12 ஆவது தெற்காசிய விளையாட்டு விழா

- சார்க் அமைப்பு 1985 டிசம்பர் 08 இல் உருவாக்கப் பட்டது.
- சார்க் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் எட்டு தெற்காசிய நாடுகள் ஒன்று சேர்ந்து பங்கேற்கும் விளையாட்டுக்களாகும்.
- ஆப்கானிஸ்தான் இதன் 8 ஆவது உறுப்பு நாடாக 2007 ஏப்ரலில் 14 ஆவது உச்சி மாநாட்டில் சேர்க் கப்பட்டது.
- இவ்விளையாட்டுக்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன.
- இவ்விளையாட்டுக்கள் தெற்காசிய விளையாட்டு கவுன்ஸிலினால் நடாத்தப்படுகின்றன.

**12 ஆவது தெற்காசிய விளையாட்டு விழா**

- இடம்:
  இந்தியாவின் அசாம் மாநிலத்தின் குவாத்தி மற்றும் மெகாலய மாநில சிலோங் நகரங்களில் இடம் பெற்றது.
- மகுடம்:
  சமாதானம், முன்னேற்றம், அபிவிருத்திக்காக விளை யாடுவோம்.
- பங்குபற்றிய நாடுகளின் எண்ணிக்கை:
  8 நாடுகள் (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான், பூடான், மாலைதீவு)
- பங்குபற்றிய போட்டியாளர்கள்: 2672
- மொத்த போட்டிகள்: 226
- ஆரம்பத் திகதி: 2016 பெப்ரவரி 05
- முடிவுத் திகதி: 2016 பெப்ரவரி 16
- ஆரம்ப நிகழ்வுக்குத் தலைமை தாங்கியவர்:
  நரேந்திர மோடி
  இதன் இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அஸாம் மாநிலத்தின் முதலமைச்சர் தருன் கோகி, விளையாட்டுத் துறை அமைச்சர் சொன்வாள் மற் றும் இலங்கையின் விளையாட்டுத் துறை பிரதிய மைச்சர் ஹரிஸ் போன்றோர் சமூகமளித்தது குறிப் பிடத்தக்கது.
- மொத்த பதக்கங்களின் எண்ணிக்கை:
  758 (தங்கம்: 226, வெள்ளி: 226, வெண்கலம்: 306)
  இலங்கை 25 தங்கம், 63 வெள்ளி, 98 வெண்கலம் உட்பட 186 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும் போட்டியை நடத்திய இந்திய அணி 188 தங்கம், 90 வெள்ளி, 30 வெண்கலங்களுடன் முதலிடத்தையும், பாகிஸ்தான் மூன்றாம் இடத்தை யும் பெற்றுக் கொண்டது.
- 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் 2019 ஆம் ஆண்டு நேபாளத்தில் நடைபெறவுள்ளது.

## 12 ஆவது தெற்காசிய விளையாட்டு போட்டியில் இலங்கை நாட்டின் புதிய சாதனைகள்

- 186 பதக்கங்களைப் பெற்று வரலாறு படைத்தது இலங்கை.
- ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் எம்.எச்.ஐ. சந்தருவன் 4.90 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத் தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.
- பெண்களுகான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ருமேசிக்கா ரத்நாயக்க 11.71 செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- பொத்துவிலைச் சேர்ந்த அஷ்ரப் ஒரு தங்கப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்து இலங்கை மண்ணுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
- இலங்கையில் நீச்சல் வீரர் மெத்யூ அபேசிங்க தெற்காசிய போட்டிகளில் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்று பதக்கங்கள் வரிசையில் முதலாவதாக உள்ளார். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஹிமாஷா எஷான் 10.28 செக்கன்களில் ஓடி தங்கத்தை சுவீகரித்தார். இவர் தெற்காசியாவின் அதிவேக ஓட்ட வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

| நாடுகள் | இந்தியா | இலங்கை | பாகிஸ்தான் | ஆப்கானிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | மாலைதீவு | பூட்டான் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தங்கம் | 188 | 25 | 12 | 07 | 04 | 03 | 00 | 00 |
| வெள்ளி | 90 | 63 | 37 | 09 | 15 | 23 | 02 | 01 |
| வெண்கலம் | 30 | 98 | 57 | 19 | 56 | 34 | 01 | 15 |
| மொத்தம் | 308 | 186 | 106 | 35 | 75 | 60 | 03 | 16 |

## ஆண்டுகளும் நடைபெற்ற இடங்களும்

| போட்டி இலக்கம் | வருடம் | இடம் | நாடு |
|---|---|---|---|
| 01. | 1984 | கத்மண்டு | நேபாளம் |
| 02. | 1985 | டாக்கா | பங்களாதேஷ் |
| 03. | 1987 | கல்கத்தா | இந்தியா |
| 04. | 1989 | இஸ்லாமாபாத் | பாகிஸ்தான் |
| 05. | 1991 | கொழும்பு | இலங்கை |
| 06. | 1993 | டாக்கா | பங்களாதேஷ் |
| 07. | 1995 | மதுரை | இந்தியா |
| 08. | 1999 | கத்மண்டு | நேபாளம் |
| 09. | 2004 | இஸ்லாமாபாத் | பாகிஸ்தான் |
| 10. | 2006 | கொழும்பு | இலங்கை |
| 11. | 2010 | டாக்கா | பங்களாதேஷ் |
| 12. | 2016 | குவாத்தி, சிலோங் | இந்தியா |

## செஸ் (சதுரங்கம்)



- செஸ் விளையாட்டின் தாயகம் - இந்தியா
- சதுரங்கத்தை கண்டறிந்தோர் - இந்தியர்
- சதுரங்கப் பலகையில் ஒரு பக்கத்தில் உள்ள சதுரங்கள் - 64
- டாம் பலகையில் உள்ள சதுரங்கள் - கறுப்பு 72, வெள்ளை 72
- King, Queen, Bishop, Pawn, Knight எனும் பதங்கள் தொடர்புடைய விளையாட்டு - Chess
- விஸ்வநாதன் ஆனந்த் - உலக செஸ் சம்பியன் பட்டத்தை 3 ஆவது முறையாக வென்று சாதனை படைத்தார்.

## விளையாட்டுக்கள் பற்றிய சின்னச் சின்ன தகவல்கள்

- கோல்ப் விளையாட்டின் தாயகம் - ஸ்கொட்லாந்து
- எட்மன்ட் கிளாரியின் பிரபல்யமான விளையாட்டு - மலையேறுதல்
- மல்யுத்த சண்டையின் அதிகபட்ச நேரம் - 12 நிமிடங்கள்
- கரப்பந்தாட்டத்தை அறிமுகம் செய்தவர் - வில்லியம் மோர்கன்
- பணக்கார விளையாட்டு என வர்ணிக்கப்படுவது - கோல்ப் விளையாட்டு
- மூளையை அதிகம் புதுப்பிக்கும் ஆற்றலுடைய விளையாட்டுக்கள் - செஸ், பெட்மின்டன், டெனிஸ்
- கபடி விளையாட்டின் தாயகம் - இந்தியா
- ஓட்ட ஆரம்ப முறைகள் - குறிப்பிட்ட இடத்திற்கு செல், ஆயத்தமாகு, ஓடு
- கோல்ப் பந்தின் உள்ளே இருப்பது - தேன்

சிப்கா றியாஸ்
கு/அல் அஷ்ரக் மு.ம.வி
தல்கஸ்பிடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## விசித்திர மனிதனே!

நவீன உலகம்
நாளை நமக்கில்லை
இதில் விசித்திரமில்லை

கடல் மண்ணில்
வரைந்த சித்திரமாய்
அழிந்திடும்

பதவிகளுக்காய்
பாசமிழந்து
பாராட்டுகளுக்காய்
வேஷம் பூண்டு
சாதனை செய்ய சாபமேற்று

மனிதனாக வாழ மறந்த
மனிதனே!!

நிலையில்லா இவ்வுலகில்
நிலையற்ற இவ்வாழ்வை
நிலை குலைத்து நிற்பது
எந்த நியதிக்கு ஏற்கும்?

சோதனைக் களமாய்
இவ்வுலகம்...
இதுவே இறை நியதி – என
அறிந்தும்
இறை போதனை மறந்து
வாழ்பவனே!!

இருமைகளையும்
செம்மைப்படுத்தாமல்
எதைத் தேடி போகிறாய்??
விசித்திர மனிதனே!!
நீ எதைத் தேடி
போகிறாய்??

✍ ஷப்னா ஹுஸைன்
தரம் 12
வெலம்பொட மு.ம.வி.

## ஐவேளை தொழுதிடு

ஐவேளை தொழுகையை தொழுதிடு
சுவர்க்க வாசனையை நுகர்ந்திடு

அல்லாஹ்வின் அருளை பெற்றிடு
கடமையை முறைப்படி செய்திடு

பாவங்களை புதைத்திடு
நன்மைகளை செய்திடு
தொழுகையை தொழுதிடு
நிம்மதியாய் வாழ்ந்திடு

முஃமீனுக்கான தொழுகையே
காபிருக்கான இடைவெளி
உண்மை முஸ்லிமாய்
வாழ்ந்திட தொழுதிடு நண்பனே



மறுமையில் முதல் கேள்வியே...
தொழுகை மார்க்கத்தின் தூணே...

தொழுதிட்டால் சுவனமே
தவறிட்டால் நரகமே
ஐவேளை தொழுகையை
தொழுதிடு நண்பனே

✍ எம்.ஆர்.எப். ருஸ்தா
கு/சாஹிரா கல்லூரி
குருணாகல்

## உறவுக்காய்...

கவலைகளோ உள்ளத்தை நிறைக்க
கண்ணீர் துடைக்க யாருமில்லை
கனவுகளும் கானல் நீராகி
கரைந்தன என் வாழ்நாட்கள்

கவலைகள் சொல்ல பலர் இருந்தும் அதை
கண்டு கொள்ள யாருமில்லை
களமிறங்க கரையில்லாது
கனக்கின்றது என்
கற்பனை விமானம்

ஊனமாய் உருவெடுக்க என்
உள்ளத்துக்கு உணர்ச்சியூட்டிய என்
உறவு அது... உயிரது...

உலகம்தான் உண்மையென்றிருந்த
இத்தனை நாட்களாய் நான்
உணரவில்லை உன்
உறவுதான் என் உயிரென்பதை

இரு கரம் ஏந்துகின்றேன்
உன் உறவுக்காய்
உயிரோடு கலந்துவிடு
என் இறைவனே

✍ பர்ஹானா நவ்பர்
கதீஜதுல் ...
மகளிர் அரபுக் கல்லூரி
வெலம்பொட

## பேசும் கவிதை - இல 11



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த பத்து கவிதைகளுக்கு பரிசாக பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 மார்ச் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பரிசுக்குரிய ஏனைய கவிதைகள்

### முதலிடம் பெற்ற கவிதை

### புதிய விடியல்

ஒற்றுமையை நிலைநாட்ட
ஒரே தேசத்தின் சிற்பிகளாய்...
ஒன்றிணைவோம்
ஒரே கீதம், ஒரே ராகம்
என்ற கோஷத்தில்
உயர்த்துவோம்
எம் கரங்களை
நாளைய விடியல்களும்
சுதந்திரமாய் பிறக்கட்டும் இம்மண்ணில்

**என். பாத்திமா ஸப்றா**
**முனீரா பெண்கள் உயர் பாடசாலை**
**அட்டாளைச்சேனை 02**

### மீட்டல்

இன்றைய சிறுசுகள்
விரல்களுக்குள்
வீரக்கொடியை சுமந்து
எமது சுதந்திரத்தின்
நினைவுகளை மீட்டி
சந்தோஷப்படுகின்றன...

**அஸ்மா மஸாஹிம்**
**அல் பஹ்ரியா ம.க.**
**தொட்டவத்த**

### வரலாறு படைத்த நாள்

பல வருட
தியாகங்களின் அறுவடையாய்
நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரமே
வருடா வருடம்
உன் நினைவுகள் வரும்போது
எமது வரலாறுகள் மீண்டும் மீண்டும்
மீட்டப்படுகின்றன...

**ஸஸ்னா அப்ராஹ்**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி**
**கன் எலிய**

### உண்மை

இன பேதங்கள்
மறந்து
குல பேதங்கள்
துறந்து
ஒற்றுமையாய் பெற்றெடுத்த
சுதந்திரத்தின்
நாள் இது

**ஜைனப் பின்த் நளீர்**
**கே/நூராணியா மு.ம.வி.**
**உயன்வத்த**

### தேசம்

இலங்கை தேசம்
பிரித்தானியரின்
கழுகுப் பிடிக்குள் இருந்து
விடுதலை பெற்ற நாட்களின்
நினைவுகள்
மறக்க முடியாத
நிஜங்கள்...

**பாத்திமா ஸிம்லா**
**கு/அந்நூர் மத்திய கல்லூரி**
**பாணகமுவ**

### வீரம் பெற்ற நாள்

போராட்டங்கள் நடத்தி
இரத்தங்கள் சிந்தி
வீடுகள் இழந்து
உயிர்கள் துறந்து
பெற்றுக் கொண்ட சுதந்திரம்
இன்றைய இளசுகள்
மறக்காதிருக்கட்டும்

**ஸானாஸ் ஹாசிம்**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி**
**கன் எலிய**

### வெள்ளைப் புறா

வெள்ளைப் புறா
வேலி கட்டி
வெள்ளைக் கடல்
அலைகளால் அடித்து
எமது இலங்கையின்
சுதந்திர தின நினைவுகள்
எத்துனை அழகானவை
ஆழமானவை

**சம்ஹா பாசில்**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி**
**கன் எலிய**

### பிரார்த்தனை

தேசியக் கொடியின்
நிறங்களின்
ஒற்றுமைபோல
எமது உள்ளங்களும்
ஒற்றுமையாக
இலங்கை தேசத்தை
உருவாக்கட்டும்

**பாத்திமா அம்னா**
**மா/ஆமினா தே.பா.**
**மாத்தளை**

### நிஜம்

அறுபத்து எட்டு வருடங்கள்
கடந்துவிட்ட
சுதந்திரத்தின் ஆயுள்
நீளமானவை
அதன் வலிகள்
நிஜமானவை

**அன்பாஸ்**
**கொ/அல் ஹிக்மா கல்லூரி**
**கொழும்பு 12**

### விடுதலை

பிரித்தானியாவின்
பிரித்தாளும் கொள்கையின்
கொடுமையில்
அடிமையாய் இருந்து
எம் மண்ணை
மீட்டு
விடுதலை பெற்ற நாளின்
நினைவுகள்
பசுமையாய் இருக்கின்றன...

**பாத்திமா றிஸ்லா**
**பொலன்னறுவை**

### ஆறு தசாப்த நினைவு

ஆறு தசாப்தங்கள்
கடந்துவிட்ட
கழிந்துவிட்ட
எமது சுதந்திரத்தின்
பிறப்பினை
நாம் சுதந்திரமாய்
கொண்டாடுகிறோம்

**பாத்திமா ஸம்ஹா**
**பாத்திமா கல்லூரி**
**புத்தளம்**

### படிப்பினையாகட்டும்

விடுதலையின்
வரலாற்று பக்கங்கள்
சோகமானவை
இழப்புக்களும்
இறப்புக்களும் நிறைந்தவை
அவை எமக்கான
படிப்பினைகளாக அமையட்டும்

**சதாஃ அய்மன்**
**அறக்கியாள**
**கெகுணகொல்ல**

### சுவடுகள்

சுதந்திரத்தின்
சுவடுகள்
மீண்டும்
மீட்டப்படும்போது
எமது தேசத்தின்
வீரம் மீள்கிறது...

**சிப்னா ஜெமீல்**
**பாத்திமா ஸஹ்றா அ.க.**
**ஒட்டமாவடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழ் தொடர்...

*04.* **கல்வி ரீதியான பிரச்சினைகள்**

❖ புகைப்பதால் அதிலுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் நரம்பு மண்டலத்தையும் ஞாபக சக்திக்குரிய மூளையின் பகுதியையும் பாதிக்கிறது. இதனால் படிக்கின்ற விடயங்களை இலகுவாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாமல் போய்விடும். மேலும் கல்வி நடவடிக்கைகளிலும் ஆர்வம் குன்றும். இதனால் கற்றல் செயற்பாடுகள் பின்னடைகின்றன.

*05.* **புகைப்பதால் ஏற்படும் உளவியல் ரீதியான விளைவுகள்**

❖ ஆண் உறுப்பு விறைக்காமை, குழந்தையின்மை, உடல் தோற்றத்தில் ஏற்படும் பாதிப்புகள் உட்பட ஏனைய உடலியல் ரீதியான பாதிப்புக்கள் ஒருவரில் பாரிய உளவியல் சிக்கல்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக மனச்சோர்வு, பதற்றம், பதகளிப்பு, உளநெருக்கீடு போன்ற உளவியல் கோளாறுகள் தோன்றும். தவிர மேற்சொன்ன எல்லாப் பிரச்சினைகளும் புகைப்பவருக்கு ஏதோ ஒரு விதத்தில் மன உளைச்சலை உண்டுபண்ணுவதுடன் அவரால் சந்தோஷமான வாழ்க்கையைத் தொடர்வதற்கு இயலாமல் போய் விடும்.


**இஸ்லாத்தின் பார்வையில் புகைத்தல்**

மதுபானத்தைத் தடை செய்வது போன்று புகைத்தலை நேரடியாகத் தடை செய்யும் வசனங்களை அல்குர்ஆனில் காண முடியாது. எனினும், புகைத்தலைத் தடை செய்யும், அதைக் கண்டிக்கும் ஏராளமான மறைமுகமான வசனங்களை நாம் அவதானிக்கலாம்.

''இன்னும் உங்கள் கைளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்.'' *(அல்குர்ஆன் 2: 195)*

''நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள்.'' *(அல்குர்ஆன் 4: 29)*

இந்த வசனங்கள் மனிதர்கள் தங்களைத் தாங்கள் அழிப்பதோ கொலை செய்வதோ கூடாது என மிகத் தெளிவாகக் கட்டளை பிறப்பிக்கின்றன. இதனடிப்படையில் தற்கொலை என்பது இஸ்லாத்தில் ஹராமாகும். சிகரட்டைப் பொறுத்தவரை அது ஒரு நச்சுப் பொருளாகும். அதைப் பாவிப்பதால் மரணம் விரைவில் வரும் என்று சிகரட் பெட்டிகளிலேயே அதைத் தயாரிப்பவர்களால் உருவப்படங்களுடன் விளம்பரம் செய்யப்படுவதை நாம் பார்க்கின்றோம்.



***ஹனீபா ஏ. வஹாப் ([illegible]ஹி)***
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology (Peradeniya)

# போதையும் மாணவர்களின் பாதையும்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனவே, இஸ்லாத்தின் பார்வையில் புகைத்தல் என்பது ஒரு தற்கொலை முயற்சியாகும். தற்கொலை இஸ்லாத்தில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது: ''நிச்சயமாக எவன் ஒருவன் (கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தைத் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான்.'' *(5:32)* இந்த வசனத்தின் படி ஒருவர் சிகரட் புகையை வெளியில் விட்டு அதை அருகில் இருப்பவர் புகைப்பதால் அவருக்கும் பாதிப்பு ஏற்பட்டு அவர் இறக்கக் காரணமாக அமையுமானால் இங்கு புகைத்தவர் முழு மனித சமூகத்தையும் கொன்றவராக மாறிவிடுவார்.

புகைத்தல் என்று வரும்போது சிகரட் மாத்திரமன்றி அனைத்து வகையான புகைத்தல்களும் இஸ்லாத்தில் ஹராமாகும். போதையை ஏற்படுத்தக் கூடிய அனைத்தும் ஹராம் என்ற கருத்துப்பட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, அன்புக்குரிய மாணவர்களே நாம் கற்றுக் கொண்டிருப்பவர்கள். இங்கு சொல்லப்பட்ட விடயங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நான் நம்புகிறேன். இத்தகைய உடல், உள, சமூக மற்றும் மார்க்க ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய புகைத்தலை விட்டு நாமும் நமது சந்ததியினரும் ஒதுங்குவது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

இதன் பிறகும் போதைப் பொருள் பாவனையில் ஒருவர் ஈடுபடுவாரெனில், அவருடைய ஈருலக வாழ்க்கையும் கேள்விக்குறியாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

நாம் ஆரோக்கியமாக இருக்கக் கூடாது; சிந்திக்கக் கூடாது; செழிப்பாக, அழகாக, பொருளாதார வளத்துடன் இருக்கக் கூடாது என்பதற்காக திட்டமிட்டுத் திணிக்கப்படும் சிகரட் மற்றும் ஏனைய போதைப் பொருட்களைப் பயன்படுத்தத்தான் வேண்டுமா? எமக்கு நோயையும் துன்பத்தையும் கஷ்டத்தையும் தந்து அவர்கள் சந்தோஷமாக இருக்க திட்டமிட்டுச் செயற்படும் பல்தேசியக் கம்பனிகளுக்கு நாம் இன்னும் உதவி செய்யப் போகின்றோமா என்பதை மாணவர்களே நீங்களே தீர்மானியுங்கள்.

எமது நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கும் மிகப் பிரதானமான வழிகளில் ஒன்றுதான் சிகரட் மற்றும் புகையிலை சார்ந்த உற்பத்திப் பொருட்களின் வியாபாரம். அந்த வியாபாரத்தை நாம் தடுத்து நிறுத்தினால் எமது நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும்; வீதிகள் அபிவிருத்தியடையும்; கல்விக்கான பண ஒதுக்கீடு அதிகரிக்கும்; சுகாதாரத்துக்காகச் செலவு செய்யும் பணம் மீதமாகும். ஒட்டு மொத்தத்தில் நம் நாடு அபிவிருத்தியடையும்.

எனவே தனிநபர், குடும்பம், சமூகம், நாடு மற்றும் நம்முடைய ஈருலக வாழ்க்கை என்பவற்றுக்கு ஆப்பு வைக்கும் புகைத்தலுக்கு முற்றுப் புள்ளி வைத்து எதிர்கால நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் பங்களிக்கும் மாணவர்களாக மாறுவோம், இன்ஷா அல்லாஹ்.

புகைத்தலைத் தூண்டும் காரணிகள் என்ன? அதிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்யலாம்? அடுத்த இதழில் எதிர்பாருங்கள், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்





நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. பாய்ச்சல், சத்தமிடல், நீந்துதல் ஆகிய மூன்று சொற்களுக்கும் பொருந்தக் கூடிய உரு எது?

i. ii. iii.

**2 ஆம் 3 ஆம் வினாக்களுக்கு பின்வரும் படங்களின் உதவியுடன் விடை தருக.**



2. இலங்கை வனங்களில் காணக் கிடைக்காத பிராணிகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

i. D, C, I ii. G, E, C iii. A, B, H

3. மனிதனின் பயன்பாட்டுக்கு வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளைக் கொண்ட கூட்டத்தினை தெரிவு செய்க.

i. B, D, G ii. A,J,C iii. F, H, A

4. மிகக் குறைவான தொடர்பைக் காட்டும் உருச் சோடியைத் தெரிவு செய்க.

i. கைத்துறப்பணம், சீவுளி

ii. சாந்தகப்பை, தூக்குக்குண்டு

iii. குறடு, இஸ்ரெப்ளர்

5. வரிசையில் முரளிக்கு முன்னால் இரண்டு ஆண்களும் 3 பெண்களும் முரளிக்குப் பின்னால் 3 ஆண்களும் 4 பெண்களும் இருந்தனர். இதன்படி வரிசையில் மொத்தமாக இருப்போர்?

i. 13 ii. 12 iii. 14

6. பருமன் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கு வரிசையில் எழுதப்படாத வரிசையைத் தெரிவு செய்க.

i. கடுகு வித்து, மிளகு வித்து, பலா வித்து, மா வித்து

ii. வெட்டுக்கிளி, நுளம்பு, கிளி, வண்ணத்துப்பூச்சி

iii. எலி, பூனை, காய், எருது

7. "அணில் கூட்டில் இட்ட முட்டைகளை பாம்பு வந்து விழுங்கிவிட்டது" இக்கூற்று பிழையானது. இதற்கான காரணம் எது?

i. அணில் கூடு கட்டுவதில்லை என்பதனால்

ii. அணில் முட்டை இடுவதில்லை என்பதனால்

iii. பாம்பு முட்டையை விழுங்குவதில்லை என்பதனால்

8. பின்வரும் கூட்டினுள் உள்ள சொற்களை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| சிறிய | பூனை | அழகான | பேசியது |
| தந்திரமான | கதிரை | | |

மேலே கூட்டினுள் அதிகம் உள்ளது எவ்வகைச் சொற்கள்?

i. பெயர்ச் சொற்கள்

ii. வினைச் சொற்கள்


iii. அடைமொழிகள்

9. முதலில் தரப்பட்ட கருத்திற்கு பொருந்தாத கருத்தினை தெரிவு செய்க.

i. இருள் சூழும்-சூரியன் மறையும்

ii. காற்று வீசும்-மரங்கள் அசையும்

iii. நாய் சோறு தின்னும்-நாய் குரைக்கும்

10.  △□○ முறையே

i. 2, 5, 7 ii. 5, 3, 2 iii. 6, 3, 2

11. ஓட்டப் போட்டியொன்றில் வெற்றி இலக்கை கடப்பதற்கு குமாருக்கு 5 நிமிடங்கள் 35 செக்கன் செலவாகியது. அதே போட்டியில் நிமாலுக்கு 282 செக்கன்கள் செலவாகியது எனின், போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றவர், இருவருக்குமிடையிலான நேர வித்தியாசங்கள் முறையே?

i. குமார், 7 செக்கன்கள்

ii. நிமால், 53 செக்கன்கள்

iii. குமார் 53 செக்கன்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 8 நண்பர்கள் தங்களுக்கிடையில் பிறந்த நாளுக்காக வாழ்த்து மடல்களைப் பகிர்ந்து கொண்டார்கள் எனின், அவர்கள் பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல் களின் எண்ணிக்கை யாது ?

i. 48 ii. 56 iii. 64

13. இவ்வுருவினை புள்ளிக்கோட்டின் வழியே இரு சம துண்டுகளாக வெட்டுவதற்கு எடுக்கும் காலம் 8 நிமிடங்கள் எனின், இதனை சம அளவாக 6 துண் டுகளாக வெட்டுவதற்கு எடுக்கும் காலம் எவ்வ ளவு ?



i. 48 நிமிடங்கள்

ii. 32 நிமிடங்கள்

iii. 40 நிமிடங்கள்

14. பின்வரும் வாக்கியத்தை மிகக் கருத்துள்ளதாக மாற் றுவதற்கு செய்ய வேண்டிய மாற்றமுள்ள விடை யினை தெரிவு செய்க.


''ரமணி புகையிரதத்தில் இருந்து இறங்குவதற்காக மணியை அடித்தாள்''

i. 'மணி' என்பதற்குப் பதிலாக 'ஊது குழல்' என இடல்.

ii. 'இறங்குவதற்கு' என்பதற்கு பதிலாக 'ஏறுவ தற்கு' என இடல்.

iii. 'புகையிரதத்தில்' என்பதற்கு பதிலாக 'பேருந் தில்' என இடல்.

15. உருக்கள் காட்டும் உபகரணங்களின் பயன்பாடு தொடர்பான ஒழுங்கு முறையிலான விடையினைத் தெரிவு செய்க.



i. வெட்டுதல், அடித்தல், தகர்த்தல்


ii. துளையிடுதல், இடித்தல், அரைத்தல்

iii. அடித்தல், வடித்தல், வெட்டுதல்

16. மாலாவின் தாய் நீலா ஆவார். தந்தை சிவா ஆவார். ராஜா மாலாவின் சகோதரன் ஆவார். மாலாவின் மகன் ரவியாகும். சித்ரா, சுரேஸ் ஆகியோர் ராஜா வின் இரண்டு பிள்ளைகள் ஆவர். இத்தகவலின்படி சிவாவிற்கு இருக்கும் பேரன், பேத்திகளின் எண் ணிக்கை யாது ?


i. 2 ii. 3 iii. 4

17.







i. 1 ii. 3 iii. 5

18.





உரு A யிலிருந்து உரு B ஐ நீக்கினால் கிடைக்கும் உரு ?

i.  ii.  iii. 

19. ரகு கணித பாடத்தையும் சுற்றாடல் பாடத்தையும் விரும்புவான். ஆனால், ஆங்கிலப் பாடத்தை விரும் புவதில்லை. சுதன் ஆங்கிலப் பாடத்தையும் கணிதப் பாடத்தையும் விரும்புவான். ஆனால், சுற்றாடல் பாடத்தை விரும்புவதில்லை. நீலா சமய பாடத்தை யும் கணிதப் பாடத்தையும் விரும்புவாள். அதன்படி மூவரும் விரும்பும் பாடம் எது ?

i. சமயம் ii. ஆங்கிலம் iii. கணிதம்

20. சதுர வடிவ கடதாசி ஒன்றில் வட்ட வடிவ துளை கள் 5 இனை இட்ட பின்னர் நான்காக மடித்தால் கிடைக்கக் கூடிய உரு எது ?




21. வீதியொன்றில் ஒரே அளவான தூரத்தில் கொடிகள் நடப்பட்டுள்ளன. 1 ஆவது கொடியிலிருந்து 10 ஆவது கொடி வரையுள்ள தூரம் 90 மீற்றர் ஆகும். அதன்படி இரண்டு கொடிகளுக்கிடையிலான தூரம் யாது ?

i. 8 m ii. 10 m iii. 9 m


22. சச்சின் A ரமேஷ்



←——→

ரமேஷ் மு.ப. 8.00 மணிக்கு A எனும் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து ஒரு மணித்தியாலத்திற்கு 3 km வேகத்தில் கிழக்குத் திசையை நோக்கிப் பயணித் தான். சச்சின் மு.ப. 8.00 மணிக்கு A யிலிருந்து பயணத்தை ஆரம்பித்து ஒரு மணித்தியாலத்திற்கு 2 km வேகத்தில் மேற்குத் திசையை நோக்கிப் பயணித்தான். அதன்படி இரண்டு மணித்தியாலங்களின் பின் அவர்கள் இருவ ருக்குமிடையிலான தூரம் யாது ?

i. 10 km ii. 08 km iii. 05 km

23. இந்த சதுரமுகியின் எதிர்ச் சோடிகளில் வரைந்துள்ள குறியீடுகள் சமமாகும். இதன்படி இச்சதுரமுகியை விரித்தால் காணக் கிடைக்கும் முறை எது ?



i.  ii.  iii. 

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

01. பின்வரும் பாடலை வாசித்து வினவப்படும் வினாக்களுக்குரிய பொருத்தமான விடையை எழுதுக.

கடலின் மீது செல்லும் கப்பல்
பார் தம்பி பார் - அதைக்
காணப் பலர் வருவதையே
பார் தம்பி பார்!

தட தடவென்று அலைகள் வந்து
பார் தம்பி பார் - காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார் தம்பி பார்!

1. பாடலில் குறிப்பிடப்படும் காட்சி எது?
2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை ஆண்பால் சொல்லினை எழுதுக.
3. பாடலில் இடம்பெற்ற இரட்டைக்கிழவிச் சொல் யாது?
4. பாடலில் இடம்பெற்ற பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல் யாது?
5. பாடலில் இடம்பெற்ற அஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல் யாது?
6. 'தழுவி' என்பதன் ஒத்த சொல்லைத் தருக.

02. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✔) எனவும் பிழையாயின் (✘) எனவும் அடைப்பினுள் இடுக.

1. 'எழுதுவர்' என்பது இறந்தகால பன்மை வினைச் சொல்லாகும்.
2. 'நீங்கள்' என்பது முன்னிலைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகும்.

03. சரியான எழுத்தைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.

1. வி....ம் பழம் (லா, ளா)
2. க.....னி (ணி, னி)
3. ந....தவனம் (ன், ண், ந்)

04 பின்வரும் பழமொழிகளின் கருத்தினைத் தருக.

1. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
2. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?


05. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தைத் தருக.


1. உச்சி குளிர்தல்
2. தோள் கொடுத்தல்

06. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. Let's draw a picture. :............................
2. I love my country. :............................
3. Is it near the chair? :............................

07. பின்வரும் ஒவ்வோர் உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1. 

2. 

08. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. மீண்டும் வாருங்கள்.
2. அப்பா எங்கே செல்கிறார்?

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. அத் இஹல(ட்)ட ஒசவன்ன :...........................
2. மகே நம வசந்தி :...........................

10. "நான் ஒரு நாட்டின் அரசனானால்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகள் சரியாக அமைந்திருத்தல் வேண்(டும்.)

1.
2.
3.

விடை தருக.

1. எல்லாப் பக்கங்களும் நீளத்தால் சமமான முக்கோணத்தின் சுற்றளவு 24 cm ஆகும். இதன்படி அம்முக்கோணத்தின் ஒரு பக்க நீளம் யாது?
2. XXX - vii இன் பெறுமதியை உரோமன் இலக்கத்தில் தருக.
3. 56 இன் 2/7 பங்கு எவ்வளவு?
4. ஒரு விற்பனை நிலையத்தில் 4 புத்தகங்களை வாங்கினால் ஒரு பென்சில் இலவசமாகக் கிடைக்கும். அதன்படி 72 புத்தகங்களை வாங்கினால் எத்தனை பென்சில்களை இலவசமாகப் பெறலாம்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சட்டையொன்றைத் தைப்பதற்கு 1 m 25 cm துணி தேவைப்படும். இதன்படி 4 m 30 cm துணியில் அவ்வாறான இரண்டு சட்டைகள் தைத்த பின்னர் மீதியாகும் துணியின் நீளம் யாது?

6. ரூபா 155.00 இற்கு வாழைக்குலை ஒன்றை கொள்வனவு செய்த வியாபாரி ஒருவர் அதனை ரூபா 55.00 இலாபம் வைத்து மீண்டும் விற்பனை செய்தார். இதன்படி அவர் விற்பனை செய்த விலை யாது?


7. நாணயமொன்றை மேலே சுண்டிவிட்டபோது நாணயத்தின் A பக்கம் B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை அருகே வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதன்படி நாணயத்தை மேலே சுண்டிவிட்ட மொத்த தடவைகளின் எண்ணிக்கை யாது?




8. கமலின் நிறை 18 kg 250 g ஆகும். நிஸாரின் நிறை கமலின் நிறையைப்போல் இரண்டு மடங்கு எனின், இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?


9. பிள்ளையொன்று நின்று கொண்டு வடகிழக்குத் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதன்பின் அப்பிள்ளை தனது வலது கைப்பக்கத்திற்கு செங்கோணத்தில் திரும்பியது எனின், தற்போது அப்பிள்ளை பார்த்துக் கொண்டிருப்பது எத்திசையை?

10. இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணாக எழுதுக.



11. நதீமுக்கு பாடசாலை செல்வதற்கு ஒரு நாளைக்கு ரூபா 17.25 செலவாகும். அதன்படி ஒரு வாரத்திற்கு பாடசாலை செல்வதற்கான மொத்த செலவு யாது?

12. இவ்வுருவின் சுற்றளவு 16 cm ஆகும். அதன்படி AB யின் நீளம் யாது?





13. 0.006 ஐ சாதரண பின்னமாகத் தருக.

14. சுருக்குக.

1. $\frac{2}{3} + \frac{6}{9}$  2. $\frac{4}{5} + \frac{1}{10}$

15. இத்தராசு சமனிலையடைவதற்கு இன்னும் எவ்வளவு நிறை A பக்கத்திற்கு இட வேண்டும்.




**1 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. வீட்டின் மின்சாரத்தை நிலத்துடன் இணைக்கப் பயன்படும் கம்பியின் நிறம்?

i. சிவப்பு ii. பச்சை
iii. நீலம் iv. மஞ்சள்

2. செண்பகத்தின் கண்களின் நிறம்?

i. வெள்ளை ii. சிவப்பு
iii. கறுப்பு iv. மஞ்சள்

3. புராதன காலத்தில் செக்கு எதற்கு பயன்படுத்தப்பட்டது?

i. வயலில் உழுவதற்கு
ii. நெல் விதைப்பதற்கு
iii. எண்ணெய் காய்ச்சுவதற்கு
iv. நெல் தூற்றுவதற்கு

4. அயடீன் அதிகம் அடங்கியுள்ள உணவு

i. முட்டை ii. கடல் மீன்கள்
iii. கிழங்குகள் iv. தானியங்கள்

5. நாய்கள் மருந்தாகப் பயன்படுத்தும் ஒரு தாவரம்?

i. வேம்பு ii. தொட்டாற்சுருங்கி
iii. பால் அருகு iv. குப்பைமேனி

6. பேருந்தினுள் காணக்கூடிய ஓர் அறிவித்தல்.

i.  ii.  iii.  iv. 

7. 'பிரேல்' முறையில் எழுத்துக்கள் யாருக்கு கற்பிக்கப்படுகின்றன?

i. சிறுவர்களுக்கு ii. குருடர்களுக்கு
iii. ஊமைகளுக்கு iv. முடவர்களுக்கு

8. 'சாண்' என்பது?

i. நேரத்தை அளக்கும் ஓர் அலகு
ii. பாரத்தை அளக்கும் ஓர் அலகு
iii. நீளத்தை அளக்கும் ஓர் அலகு
iv. திரவத்தை அளக்கும் ஓர் அலகு

9. கண்களைத் திருப்ப முடியாது கழுத்தை சுற்றும் முற்றும் திருப்பும் பிராணி?


i. காகம் ii. மாடு iii. நாய் iv. குரங்கு

10. PHI என்பதால் அறிந்து கொள்ளக்கூடிய அரச உத்தியோகத்தர்?

i. கிராம சேவகர் ii. தபால் அதிபர்
iii. பொது சுகாதார பரிசோதகர்
iv. தேர்தல் ஆணையாளர்

11. பிள்ளையொன்று A, B, C, D எனும் 4 இரும்பாணிகளை முறையே தேங்காய் எண்ணெய், மண்ணெய், நீர், கிறீஸ் என்பவற்றில் அமிழ்த்தி வைத்த முறையை பின்வரும் உருக்கள் காட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தே.எண்ணெய் மண்ணெய் நீர் கிறீஸ்

இவற்றில் மிக விரைவாக துருப்பிடிப்பது?

i. A ii. B iii. C iv. D

12. அவித்து உணவாக பயன்படுத்தக் கூடிய வித்து வகைகள் அடங்கிய விடை எது?

i. கோப்பி, பூசணி ii. கொத்தமல்லி, கடுகு
iii. பயறு, கௌபி iv. கோப்பி, உழுந்து

13. நீரில் முட்டையிடும் பிராணி அல்லாதது?

i. நுளம்பு ii. வண்ணத்துப்பூச்சி
iii. தவளை iv. மீன்

14. கடல் நீரிலிருந்து உப்பைப் பெறுவதற்கு செய்ய வேண்டியது.

i. கடல் நீரை வடித்தல்
ii. கடல் நீரை குளிரேற்றல்
iii. கடல் நீரை சூடேற்றல்
iv. கடல் நீருக்கு குளோரின் சேர்த்தல்

15. இலங்கையில் தேசிய மிருகக் காட்சிசாலை அமைந்துள்ள இடம்?

i. பின்னவல ii. குமண
iii. தெஹிவல iv. யால

**விடைகள்**

01. 1. கடற்கரை காட்சி
2. தம்பி
3. தடதட
4. பார்
5. கப்பல்
6. தொட்டு

02. 1. ✗
2. ✓

03. 1. ளா
2. ணி
3. ந்

04. 1. எதையும் அளவோடு செய்ய வேண்டும்
2. பிறவிக்குணம் மாறாது

05. 1. மிகவும் சந்தோஷப்படுதல்
2. உதவி செய்தல்

06. 1. படம் ஒன்று வரைவோம்
2. நான் எனது நாட்டை விரும்புகிறேன்
3. அது கதிரையின் அருகில் இருக்கிறதா?

07. 1. Flowers
2. Butterfly

08. 1. ஆயெத் என்ன
2. தாத்தா கொஹெத யன்னே?

09. 1. கைகளை மேலே உயர்த்துங்கள்
2. எனது பெயர் வசந்தி

10. 1.
2.
3.

1. 8 cm
2. xxxiii
3. 16
4. 18
5. 180 cm
6. ரூபா 210.00
7. 22 தடவை
8. 54 kg 950 g
9. தெற்கு திசை
10. 0.3
11. ரூ.86.25
12. 4 cm
13. 6/1000
14. 1. 1 1/3
2. 7/10
15. 800 g

1. ii
2. ii
3. iii
4. ii
5. iii
6. ii
7. ii
8. iii
9. i
10. iii
11. iii
12. iii
13. ii
14. iii
15. iii

**41 ஆம் பக்கத் தொடர்...**

**விடைகள்**

1. i
2. ii
3. iii
4. iii
5. i
6. ii
7. ii
8. iii
9. iii
10. ii
11. ii
12. ii
13. iii
14. iii
15. ii
16. ii
17. i
18. i
19. iii
20. iii
21. ii
22. i
23. i



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எண்ணங்களின் வண்ணங்கள் - 08

## தலைப்பு: மான் கூட்டம்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



எம்.என்.எப். ஹனா
கு/அல்ஹுதா மு.ம.வி
ரமுக்கந்தன, ரிதீகம


எம்.ஆர். ஷஹீதா மில்லத்
கு/அல்ஹுதா மு.ம.வி
ரமுக்கந்தன, ரிதீகம


எம்.ஏ. சம்ஹா
வேப்பமடு மு.வி.
புத்தளம்

### பாராட்டை பெறும் சித்திரங்கள்


எம்.எச்.எப். ஹப்னா
கு/அல்ஹுதா மு.ம.வி
ரமுக்கந்தன, ரிதீகம


இக்பால் ஜெஷா
சுமையா பெண்கள் அ.க.


அப்சல் ரனா
வெயுக்காகம மு.ம.வி.
முன்னங்குளம்



எம்.ஏ. சாஹிறா
வேப்பமடு மு.வி.
புத்தளம்



ஜே.எம்.ஏ. ஆயிஷா அப்ரி
கிரி/அரக்கியால மு.ம.வி.
அரக்கியால



எம்.ஆர்.எப். நஸ்ரீன்
அல் ஹுமைரா மு.வி.
எதண்டவெல


எம்.எம்.எப். நுஹா
பு/மணல்குன்று மு.ம.வி.
புத்தளம்


மிப்லா முஜிபுர் ரஹ்மான்
முஸ்லிம் பெண்கள் அ.க.
கள் எளிய


எம்.ஜ. பாத்திமா
க/கம்பளை ஸாஹிரா க.
கம்பளை


எம்.ஆர். ஷவ்வாப்
புத்தளம்


எம்.ரீ.எப். ரஸீமா
மாத்தளை


எஸ்.எச்.எப். ஜின்னாஃ
கிரி/கெகுனகொல்லை தே.பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்



ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD







தினமும் காலை 9.00 மணியிலிருந்து
இரவு 9.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை
மொத்தமாகப் பெற: 0773171725

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks எனType செய்து
40404க்கு அனுப்புங்கள்.



eZ Cash MasterCard VISA AMERICAN EXPRESS Accepted



77, தெமடகொட வீதி,
கொழும்பு-9

HOTLINE:
0115 925 935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org